பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 5 வியாழக்கிழமை (21.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :237

# அரசுடன் நேரடிச் சந்திப்பா? அடியோடு புலிகள் நிராகரிப்பு!

## யுத்தநிறுத்தத்தை படைத்தரப்பினர் மீறிவருகின்ற நிலையில் அது இல்லாததுதான் ஒருகேடா எனத் தமிழ்ச்செல்வன் காட்டம்

கிளிநொச்சி,ஜூலை21

யுத்தம் எந்நேரமும் வெடிக்கலாம் என்ற பதற்றநிலை பரவிவரும் சூழலில், அதைத் தணிக்கும் முயற்சியாக அரசின் பிரதிநிதிகளையும் புலிகளின் பிரதிநிதிகளையும் நேருக்கு நேர் சந்திக்க வைத்துப் பேச்சு நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை அடியோடு நிராகரித்துவிட்டனர் விடுதலைப் புலிகள்.

கிழக்கில் பெரும் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டு, தமது அமைப்புக்கு எதிராக கொலைவெறி நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் அரசுத் தரப்போடு பேச்சு நடத்துவது சாத்தியமே இல்லை என்று புலிகள் தெரிவித்து விட்டனர்.

முதலில் தமது யுத்த நிறுத்த மீறல்களை - புலிப் போராளிகளுக்கு எதிரான கெடுபிடிகளை - அரசுப் படைகள் நிறுத்தி நியாயமாக நடந்துகொள்ளட்டும். அதன் பின்னர் நேரில் பேசும் சூழ்நிலை உள்ளதா என்பதை ஆராயலாம் என்றும் புலிகள் தெரிவித்துவிட்டனர்.

புலிகளின் இந்த நிலைப்பாட்டைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

நேற்றுக் கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த நோர்வேயின் கொழும்புக்கான பிரதித் தூதுவர், கண்காணிப்புக்குழுத் தலைவர் ஆகியோரிடமுமே இந்த விடயங்களைத் தாம் தெளிவுபடுத்தினார் எனத் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு நண்பகல் 12.45 மணிக்கு முடிவடைந்தது.

நோர்வே பிரதித்தூதர் ஒட்வர் லக்ரிரேட், கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் ஆகியோர் நேற்றுக் காலை 10.25 இற்கு ஹெலியில் வந்திறங்கிய கையோடு பேச்சுக்களை ஆரம்பித்தனர்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு நகரம் புதிய இடத்தில்: திட்ட வரைபு நேற்றுக் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூலை21

முல்லைத்தீவு நகரத்தைப் புதிய இடத்தில் நிறுவுவது தொடர்பான திட்ட வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு ஒன்று நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது. திட்டமிடல் செயலகத்தின்பதில் பணிப்பாளர் சண்முகலிங்கம் ரஞ்சன், நகர அபிவிருத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்ப்புப் பிரசாரங்களை முறியடிக்க சு.க.திட்டம்

கொழும்பு, ஜூலை21

அரசிற்கு எதிராகவும் ஜனாதிபதிக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் மற்றும் விமர்சனங்களை முறியடிக்கும் வகையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருக்கின்றது.

கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதியின் தலைமையில்

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பின்போது...

## திருமலை புத்தர் சிலை விவகாரத்தில் அரசின் இப்போதைய நிலை என்ன?

### விளக்கக்கோரி சம்பந்தன் நாடாளுமன்றத்தில் காட்டமான உரை

கொழும்பு,ஜூலை21

திருகோணமலை நகரில் இரவோடு இரவாக நிறுவப்பட்ட புத்தர் சிலை தொடர்பான அரசின் நிலைப்பாடு என்ன? விரைவில் அரசு அதனை வெளிப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார் சம்பந்தன் எம்.பி.

சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டாரவின் அனுமதியுடன் நேற்று அவர் நாடாளுமன்றில் விசேட உரையொன்றை ஆற்றினார்.

திருமலை புத்தர் சிலையை அகற்றக்கோரி அரசு சார்பில் சட்டமா அதிபரால் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட மனுவை திரும்பப் பெறுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடமே நடத்தப்படவேண்டும்

### வாஷிங்ரனில் சர்வதேச ஜனநாயகச் சங்கம் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் இவ்வருடத்திலேயே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று சர்வதேச ஜனநாயகச் சங்கம் வாஷிங்ரனில் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருக்கிறது.

இந்தக் கூட்டம் [illegible] கிழமைவாஷிங்ரனில் ஆஸ்திரேலியப் பிரதமர் ஜான் ஹவார் தலைமையில் நடைபெற்றது. 26 நாடுகளைச் சேர்ந்த மூன்று பிரதமர்கள் உட்பட அரசி

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் தொடர்பாக விளக்கமளிக்க மாவட்ட நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை

### மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை21

அரசமைப்பு விவகாரம் தொடர்பான வழக்குகளில் விளக்கம் கூறும் அதிகாரம் மாவட்ட நீதிமன்றங்களில் இல்லை. அவற்றை உயர் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்த அல்லது நிராகரிக்க மட்டுமே அதற்கு அதிகாரம் உள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சத்தியா ஹெட்டிகே.

பொதுக் கட்டமைப்புக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பை எதிர்த்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் வண.எல்லே குணவங்ஸ தேரர், தேசிய பிக்கு முன்னணித் தலைவர் வண. தம்பர அமிலதேரர், ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் வாஸ் குணவர்த்தன ஆகியோர் மாவட்ட நீதிமன்றத்தில் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

உடன்படிக்கையைச் செயற்படுத்துவதற்கு எதிராக இடைக்காலத் தடை ஒன்றை விதிக்கும் படியும் -

விடயத்தை விசாரித்து இந்த உடன்படிக்கை சட்டவிரோதமானது என்று அறிவிக்கும்படியும் - கோரியே அவர்கள் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த புலிகள் வற்புறுத்து

### நோர்வே மூலம் நேற்று அரசுக்கு தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை21

தமிழீழ விடுதலைப் புலிகளோடு உடன்பாடு காணப்பட்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை அப்படியே - தாமதமின்றி - நடைமுறைப்படுத்துமாறு வற்புறுத்திக் கேட்கிறோம். இதனை நோர்வேத் தரப்பு ஊடாக அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இப்படித் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நோர்வே பிரதித் தூதர் ஒட்வர் லெக்கிரட் மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் ஆகியோரைச்சந்தித்துப் பேசிய பின்னர் உதயனுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி மாநாடு இன்று ஆரம்பம்

தமிழர்களின் கல்விப் பிரச்சினைகள், சவால்கள், கல்வி வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவை தொடர்பாக ஆராய்வதற்கான கல்வி மாநாடு இன்று வியாழக்கிழமை கோப்பாய் ஆசியர் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பமாகின்றது. இன்றுமுதல் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை இந்த மாநாடு நடைபெறும்.

கல்வி; ஒரு பன்முகப்பார்வை என்னும் பொதுத்தலைப்பில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டை அகவிழி அமைப்பும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இந்த மாநாடு நான்கு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவையாவன -

- தமிழ்ச்சமூகத்தில் கல்வி குறித்த விழிப்புணர்வையும் அவை குறித்த பன்முக உரையாடல்களையும் ஏற்படுத்துவது.
- சமூகத்தில் ஏற்பட்ட போர் மற்றும் இயற்கைப் பேரிடர்கள் மூலமாக தமிழர் கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் சவால்களையும் இனங்காணுதல்.
- சமகாலத்தில் புதிய கல்விச் செயல்நெறிகளை இனங்காணுதல்.
- நவீன கல்விச் செயல்நெறிகளுக்கும் சமூகத்தேவைகளுக்கும் ஏற்ற வகையில் தமிழர் கல்வியின் எதிர்கால வளர்ச்சிகளை நெறிப்படுத்தல்.

மாநாட்டின் நோக்கங்களுக்கு ஏற்ற வகையில் 6 அம்சங்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

- தமிழர் கல்வி; ஊற்றுகளும் ஓட்டங்களும்
- தமிழர் மரபின் தளமும் வளமும்
- கல்வி; மரபும் மாற்றமும்
- கல்வியும் மொழியும்
- கல்வியும் முகாமைத்துவமும்
- கல்வியும் கலைத்திட்டமும் ஆகிய அம்சங்களே அவை.

மாநாடு மூன்று தினங்களில் 6 அமர்வுகளாக நடைபெறும். முதல்நாள் காலை அமர்வு தொடக்கவிழாவாக அமையும் ஏனைய அமர்வுகள் மேற்குறிப்பிட்ட 6 அம்சங்களையும் பற்றியதாக அமையும். இந்த மாநாட்டில் பல்வேறு கல்வியியலாளர்கள் கலந்துகொள்வார்கள். ஆர்வலர்கள் எவரும் இந்த மாநாட்டில் பங்கு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (8)

## குருபூர்ணிமா விழா

யாழ்ப்பாணம்,ஜூலை21

நல்லூர் திவ்ய ஜீவன சங்கத்தின் ஸ்தாபகர் குருதேவர் சிவானந்தரின் குருபூர்ணிமா விழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் சங்க மண்டபத்தில் கொண்டாடப்பட வுள்ளது.

அபிஷேகம், பாத பூஜை, பஜனை உட்பட சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ)

## கூட்டுறவுக் கிளைகள் இன்று திறந்திருக்கும்

அரியாலை , ஜூலை21

இன்று போயா விடுமுறை எனினும் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் யாவும் முழு அளவில் திறந்து வியாபார நடவடிக்கைகள் இடம்பெறும் என்று சங்கத் தலைவர் சூ.சிறில் அறிவித்துள்ளார். (எ-17-30)

# அரசுடன் நேரடிச் சந்திப்பா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு முடிந்தவுடன் ஊடகவியலாளர்களுக்கு வழமையில் கருத்துக்கூறும் நோர்வேப் பிரதித்தூதுவர், கண்காணிப்புக்குழுத் தலைவர் ஆகியோர் நேற்றுக்கருத்தெதையும் கூற மறுத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றனர்.

சந்திப்பை அடுத்து தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளருக்கு அளித்த பேட்டி வருமாறு-

*கேள்வி:-* இன்றைய சந்திப்பில் என்ன விடயங்கள் ஆராயப்பட்டன?

*பதில்:-* இதுவும் வழமையான சந்திப்புப் போன்றே அமைந்தது.

மோசமடைந்துவரும் நெருக்கடி நிலை பற்றியும் தற்போது ஏற்பட்டுவருகின்ற குழப்பகரமான நிலைமை பற்றியும் விவாதிக்கும் முகமாகவே இச்சந்திப்பு இடம்பெற்றது.

எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாடுகளைத் தெளிவாகவும் மிகவும் ஆணித்தரமாகவும் உறுதியாகவும் அவர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளோம்.

### சர்வதேச கரிசனை பயன்தராமல் போகலாம்

*கேள்வி:* நெருக்கடி நிலை ஏற்பட்டு உதவி வழங்கும் நாடுகளும் அமெரிக்கத் தூதரகமும் வன்முறைகளை நிறுத்தி சமாதானத்தை நோக்கிய பாதையில் செல்லுமாறு வலியுறுத்தியுள்ளன. இந்த நிலையில் இது விடயமாக ஏதாவது முடிவுகள் எடுக்கப்பட்டனவா?

*பதில்:-* சர்வதேச சமூகத்தின் கரிசனைகளை நாங்கள் மதிக்கின்றோம். புரிந்துகொள்ளுகின்றோம். அதேவகையில் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேயின் முயற்சிகளையும் ஈடுபாட்டையும் நாங்கள் மதிக்கின்றோம்.

ஆனால், ஒரு தரப்பு என்ற ரீதியில் அரசும் படைத்தரப்பும் தான் சரியாகச் செயற்படவேண்டும். யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் சரியாகப் பேணி இப்பொழுதுள்ள நிலைமைகளைச் சீர்செய்வதற்கு அவர்கள் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில்நிச்சயமாக இந்த முயற்சிகளோ, சர்வதேச சமூகத்தின் கரிசனையோ வெற்றியளிக்கும் போல் எங்களுக்குத் தெரியவில்லை.

இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 1.8 சரத்தை முழுஅளவில் நடைமுறைப்படுத்தும்படி இப்போதும் நாம் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் வலியுறுத்தியிருக்கிறோம்.

எமது தாயகப்பிரதேசத்தில் செயற்படுகின்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவை தாயகப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்படவேண்டும். இதை இலங்கை அரசோ, படைத்தரப்போ நடைமுறைப்படுத்தாவிடின் எமது தாயகப்பிரதேசத்தில் நடக்கின்ற கொலைகளுக்கு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்கமுடியாது. இக்கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். போராளிகள் இங்கு சுதந்திரமாக- பாதுகாப்பாக - நடமாடும் உரிமை நிலை நித்தப்படவேண்டும். முக்கியமாக அரசியல் பணியில் நிராயுதபாணிகளாக செயற்படும் போராளிகள் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி பாதுகாப்பாக செயலாற்றக் கூடியதாக இருக்கவேண்டும்.

### அரசின் பொறுப்பு

இந்த விடயங்களைச் சீர்செய்யாது யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது நிச்சயமாக சாத்தியமில்லை. தற்போதைய சூழ்நிலை அவ்வாறான இலக்கை நோக்கித்தான் தள்ளிக்கொண்டிருக்கின்றது என்பதை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஆயுதக் குழுக்களைச் செயலிழக்கச் செய்வதும் ஆயுதக்குழுக்களைக் கைதுசெய்து அவற்றின் நடவடிக்கைகளை முடக்குவதும் அரசினதும் படைத்தரப்பினதும் கைகளில் தான் உள்ளன.

இராணுவத்தின் துணையோடு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் தான் இத்தகைய குழுக்களின் முழு நடவடிக்கைகளும் உள்ளன.

எமது மக்களோ, போராளிகளோ எல்லோரும் கொலைசெய்யப்படுகின்ற நிகழ்வுகள் எல்லாம் இந்தப்பகுதிகளுள் தான் நடக்கின்றன.

ஆகவே, இது அரசுக்கும் படைத்தரப்புக்கும் உள்ள முழுப்பொறுப்பு. இந்த யுத்த நிறுத்தச் சூழலைப் பேணவேண்டும். சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்பு அவர்களுக்கு இருக்குமாக இருந்தால், இந்த விவகாரம் உடனடியாக தீர்வுகாணப்படக்கூடிய ஒன்று.

இந்த நிலைமையை விளக்கினோம். சர்வதேச சமூகத்தின் கரிசனைக்கு ஏற்ப இவ்விடயங்களில் தீர்வுகாணும் பொறுப்பு அரசுக்கும் படைகளுக்குமேயுள்ளது. அவர்களின் கைகளில்தான் எல்லாம் உள்ளன. எங்கள் கைகளில் இல்லை.

### படை முகாம்களில் ஆயுதக்குழுக்கள்

*கேள்வி:-* நெருக்கடியைத் தவிர்க்க சர்வதேச சமூகம் முயற்சி மேற்கொண்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இன்று நடந்த பேச்சுக்களின் சிறிய அளவிலாவது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என நம்பலாமா?

*பதில்:-* இன்றைய சந்திப்பில் எவ்வித முன்னேற்றமும் இல்லை.

மிகமுக்கியமான முதன்மைப்படுத்தப்பட்ட விடயமான யுத்தநிறுத்த சூழல் கேள்விக்குறியாகும் நிலை தொடர்கின்றது. அனைத்து சமாதான முன்னெடுப்புகளுக்கும் அடிப்படையாக அமைவது இந்த யுத்த நிறுத்தச் சூழல்தான், அமைதிச் சூழல் பேணப்படவேண்டும். இது சீர்குலைக்கப்படும் நிலைதான் இன்றுள்ளது.

எமது போராளிகள் நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடும்போது கொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் அரசியல் அலுவலகங்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றன. தென் தமிழீழத்திலும் கிழக்கு மாகாணத்திலும் இந்த நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. அங்கு இப்போது இராணுவ முகாம்கள், இராணுவ நிலைகள் மத்தியில் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதைப் பொதுமக்கள் எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். நேரடியாகக் கண்காணிப்புக்குழுவுக்கு அடிக்கடி முறையிட்டுள்ளோம்.

இதற்கு எந்தவித தீர்வும் காணப்படாமல் இராணுவம் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது. இதற்குஉடனடியாகமுடிவுகட்டப்படவேண்டும்.

அதற்கான ஆக்கபூர்வமான செயற்பாட்டையோ, முன்னெடுப்புகளையோ அரசு செய்யாத நிலையில் - நோர்வேத் தரப்புக்கு அது சம்பந்தமாக ஆலோசனைகளோ கருத்துக்களோ சொல்லப்படாத நிலையில் தான் - அவர்கள் இங்கு வருகை தந்துள்ளனர்.

### நோர்வே யோசனை புலிகள் நிராகரிப்பு

*கேள்வி:-* இந்த விஜயத்தின்போது நெருக்கடி நிலையை தவிர்க்க நோர்வே தரப்பு ஏதாவது யோசனைகளை முன்வைத்ததா?

*பதில்:-* இரு தரப்பையும் நேரில் சந்தித்துப் பேச வைக்கின்ற சூழலை உருவாக்குவதுதான் அவர்களின் யோசனை, அதற்குரிய சாத்தியப்பாடான சூழலைப் படைத்தரப்பு குழப்பிவரும் நிலையில் நாங்கள் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இருக்கின்றோம் என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அங்கு போராளிகள் துன்புறுத்தப்படுவதும் போராளிகள் கொல்லப்படுவதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதுமான நிலையில், நமது போராளிகளே நடமாடமுடியாத சூழலை உருவாக்கிவிட்டு, எமது போராளிகளை அரசுத் தரப்போடு நேரடியாகச் சந்திக்க வைக்க முனைவது சாத்தியமற்ற விடயம்.

எமது தலைமைப்பீடத்தின் இந்த உறுதியான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இரு தரப்புமேவிரிவாக ஆராய்ந்து இரு தரப்பும் ஒப்பமிட்டு உடன்பாடு கண்டு ஒப்பந்தம் இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கை. இந்த உடன்படிக்கையை முதலில் மதித்து நடக்கவேண்டும். உடன்படிக்கையை ஒழுங்காக அமுல்படுத்துவதன் ஊடாகத்தான் இரு தரப்பின் நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்பலாம். உடன்படிக்கையின் அடிப்படை விதிகளையே தகர்க்கின்ற வகையில் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து எம்மீதும் எமது மக்கள் மீதும் நிழல் யுத்தத்தை திணித்துக்கொண்டு நேரடிப் பேச்சு என்ற இப்படியான முயற்சிகளை ஒழுங்கமைப்பது என்பது சாத்தியமில்லாத விடயம். இதை நாங்கள் தெளிவாக அவர்களுக்கு வலியுறுத்தியுள்ளோம்.

*கேள்வி:-* அரசு- புலிகள் நேரடிச் சந்திப்பு உடனடியாகச் சாத்தியமில்லைஎன்று தெரிவித்தீர்களா?

*பதில்:-* நேரடிச் சந்திப்பு என்பது ஒரு நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் போதுதான் சாத்தியமாகும். ஆகவே, நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பக் கூடிய சூழலை அரசும் படைத்தரப்பும் உடனடியாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதைத்தான் நோர்வேக்குச் சுட்டிக்காட்டி வலியுறுத்தியுள்ளோம்.

### புதிய யோசனை எதுவும் வரவேயில்லை

*கேள்வி:-* போராளிகளின் சுதந்திரமான போக்குவரத்து ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் ஆகியன தொடர்பாக புதிய யோசனை எதையாவது அரசு நோர்வே மூலம் அனுப்பியிருந்ததா?

பதில்:- இன்று அவர்கள் அத்தகைய யோசனை எதையும் அனுப்பவில்லை. எங்களின் உறுதியான நிலைப்பாட்டை அறிந்து செல்லும் நோக்கோடுதான் நோர்வேத் தரப்பு இன்று வருகை தந்திருக்கின்றது.

எமது தலைமைப்பீடத்தின் உறுதியான நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளோம்.

*கேள்வி:-* நோர்வேத் தரப்பு மீண்டும் வன்னி வரும் சாத்தியம் உள்ளதா?

*பதில்:-* அது குறித்து எங்களால் கருத்துச் சொல்லமுடியாது. படைத்தரப்பும் இலங்கை அரசும் இவ்விடயத்தில் காட்டும் நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் எதிர்காலத்தில் அப்படியான சாத்தியம் ஏற்படும் என நம்புகிறேன்.

*கேள்வி:-* நல்லெண்ண சமிக்ஞைகள் வரும் என எதிர்பார்க்கிறீர்களா?

*பதில்:-* அதை இப்பொழுது சொல்ல முடியாது. அரசையோ, படைத்தரப்பையோ நம்பி எந்த நம்பிக்கைகளையும் தெரிவிக்க முடியாத துரதிஷ்டவசமான நிலையில் நாங்கள் இருக்கின்றோம் - என்றார். (க-3)

# பொதுக்கட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக் கட்டமைப்புக் குறித்து கேட்டபோதே தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

பொதுக்கட்டமைப்பு விவகாரம் தொடர்பாக எமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக - தெளிவாக - தெரியப்படுத்திவிட்டோம்.

நீண்டகால இழுத்தடிப்புக்குப் பின்னர் தான் இந்த உடன்பாட்டில் அரசுத் தரப்பு கையெழுத்திட்டது. இனிமேலும் காலத்தை இழுத்தடிப்பதை அனுமதிக்க முடியாது. ஒப்ப மிட்ட விடயங்களை அப்படியே மாற்றமின்றி முழு அளவில் நடைமுறைப்படுத்தும்படி வற்புறுத்துகிறோம்.

இந்த இழுத்தடிப்புகளால் எமது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். ஒருபுறம் யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கான அவசர மனிதாபிமான புனர்வாழ்வுப் பணிகள் செய்யப்படவில்லை. மறுபுறம் ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோர் இன்னும் அவலப்படுகின்றனர்.

இதற்கு மேலும், எமது மக்களால் பொறுமை காக்கமுடியாது. விரக்தியின் விளிம்பில் இருக்கும் மக்கள் இந்தப் போக்குக்கு எதிராக எழுச்சிகொள்ளத் தயாராகி வருகிறார்கள் என்பதை நோர்வே ஊடாக அரசுத் தரப்புக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

பொதுக்கட்டமைப்பு மற்றும் யுத்தநிறுத்தம் ஆகியவை தொடர்பான உடன்பாடுகளை இணக்கம் கண்டபடி அப்படியே நடைமுறைப்படுத்துங்கள் என்று வற்புறுத்துகின்றோம்.

தமிழர் தாயகத்தில் துணை இராணுவக் குழுக்கள் எதுவும் செயற்படக்கூடாது என்று யுத்தநிறுத்த உடன்பாட்டின் 1-8 ஆவது ஷரத்துக் கூறுகிறது. இதை முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறு வற்புறுத்துகின்றோம்.

இந்த ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள், அவற்றின் பின்னணியில் படைத்தரப்பு இருப்பது பற்றிய விவரங்கள், அதனோடு தொடர்புபட்ட படை முகாம்கள், சம்பவ விவரங்கள் உட்பட பல உண்மைகளை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் நோர்வே பிரதித் தூதுவருக்கும் விலாவாரியாக - விளக்கமாக - எடுத்துக் கூறியுள்ளோம்.

இந்த ஆயுதக் குழுவினர் அனைவரும் கூண்டோடு கைதுசெய்யப்பட வேண்டும். அவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவர்கள் எம்மிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் சுமுக நிலைமை ஏற்படும் என்பதை கூறியுள்ளோம்.

எமது போராளிகளுக்கு எதிராக ஆயுதம் தாங்கி - அரச தரப்பின் துணையோடு - செயற்படும் சகல துணைப்படையினரும் குழுவினரும் உடனடியாக முடக்கப்பட வேண்டும்.

எமது போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கான பாதுகாப்பு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். எமது அலுவலகங்கள், முகாம்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். போராளிகளின் பாதுகாப்பான பயண ஒழுங்குகள் கட்டுப்பாடுகள், நிபந்தனைகளின்றி ஏற்படுத்தப்படவேண்டும்.

இவற்றில் அரசு ஆக்கபூர்வமாகச் செயற்பட்டால்தான் இயல்பு நிலைமை திரும்பும் வாய்ப்பு ஏற்படும்.

ஒன்று - பொதுக்கட்டமைப்பு ஒப்பமிட்ட அடிப்படையில் அப்படியே நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.

மற்றது - யுத்த நிறுத்த உடன்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்த அரசு இணங்க வேண்டும்.

இவை இரண்டும் நடைபெறாவிட்டால் மக்கள் எழுச்சியும், குழப்பமும் தவிர்க்க முடியாததாகலாம்.

நீதிமன்றம், அது இது என்று கூறி அரசு விலகிக் கொள்ளமுடியாது.

யுத்த நிறுத்த உடன்பாட்டையோ, அமைதி முயற்சிகளையோ,பேச்சுக்களையோ தென்னிலங்கை அரசுகளின் நீதிமன்றங்களைக் கேட்டு நாம் தொடங்கவில்லை. அவை குறித்து நாம் கவனம் எடுக்கப்போவதில்லை. அது அரசின் விவகாரம்.

இலங்கை நீதிமன்றங்களின் கருத்தை எடுத்துக் கொண்டு இங்கு வரவேண்டாம் என்று கூறிவிட்டோம்.

தன்னிடம் உள்ள நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை அப்படியே நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ஏதும் செய்வாரா என்பதை அறியப் பார்த்திருக்கிறோம். அப்படி அதை நடைமுறைப்படுத்த அவர் முன் வந்தால் நல்லது. அது ஆக்கபூர்வமான நிலைப்பாட்டை ஏற்படுத்தும். என்றார் - தமிழ்ச்செல்வன்.

(க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## இணைத் தலைமையா? எதற்கு?

இலங்கையில் போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் யுத்தநிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்கக் கோரி இணைத் தலைமை நாடுகள் (அல்லது அமைப்புகள்) சார்பில் நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அறிக்கைக்குரிய விடயங்களுக்குள் இறங்க முன்னர் இந்த அறிக்கையே பலரினதும் புருவத்தை உயர்த்தியிருப்பதைப் பார்ப்போம்.

அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் ஆகியவற்றோடு ஐரோப்பிய யூனியனும் இந்த இணைத் தலைமை அமைப்பில் இடம் பெற்றுள்ளது. ஐரோப்பிய யூனியன், ஐரோப்பாவைச் சேர்ந்த 25 நாடுகள் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பு. அதன் தலைமை இப்போது பிரிட்டனிடம். அதன்படி பார்த்தால் இந்த 25 நாடுகளோடு அமெரிக்கா, ஜப்பான், நோர்வே ஆகியவை சேர்ந்த இந்த இணைத் தலைமை என்பது உலகின் கணிசமான பிரதேசத்தையும், நாடுகளையும் உள்ளடக்கிய சர்வதேச சமூகமாகும். அந்தவகையில் இணைத் தலைமை நாடுகளின் கருத்து ஒட்டுமொத்தச் சர்வதேச சமூகத்தின் கருத்தாகக் கூடப் பிரதிபலிக்கப்படக் கூடியது; கருதக்கூடியது.

சரி. இந்த நாடுகள் எதற்கு இணைத் தலைமை வகிக்கின்றன? இதுதான் கேள்வி.

முதலில் 2002 இறுதியில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஆயத்தக் கூட்டத்தில்தான் இந்த இணைத் தலைமை நாடுகள் குறித்து அதிகம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதன் பின்னர் 2003 ஜூனில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில்தான் இந்த இணைத் தலைமை என்பது பரவலாக உறுதிப்படுத்தப்பட்டது. அதாவது, 'இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமை நாடுகள்' (Co-Chair) என்ற பதம் பாவிக்கப்பட்டது. அதன் பின் உதவும் நாடுகள் மாநாட்டின் இணைத் தலைமை அமைப்புகளாகவே இவை நான்கும் கருதப்பட்டு வந்தன.

ஆனால், நேற்றுமுன்தினம் அந்த நான்கு நாடுகளின் சார்பிலும் கொழும்பில் உள்ளஅமெரிக்கத் தூதரகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த நான்கு நாடுகளும் அல்லது அமைப்புகளும் இணைந்து தலைமை வகிக்கும் கட்டமைப்புக்கு ஒரு புதிய பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. அறிக்கையின் தலைப்பிலும் அறிக்கையின் உள்வாசகங்களிலும் அது குறிப்பிடப்பட்டுள்ளது. 'இலங்கை அமைதி நடவடிக்கைகளுக்கான இணைத் தலைமை' (Co-Chair Of the Srilanka Peace Process) என்பதுதான் அந்தப் புதுப் பெயர். இந்தப் பெயரின் உண்மை அர்த்தத்தைப் புரிந்து கொண்டுதான் அதை அவை நான்கும் சேர்ந்து சுவீகரித்துக் கொண்டனவா என்பது தெரியவில்லை.

இலங்கை இனப்பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டு. ஒன்று - இலங்கை அரசு. மற்றது - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். இந்த இரண்டு தரப்புகளுக்கும் இடையில்தான் அமைதி முயற்சிகள் - சமாதான நடவடிக்கைகள் - இலங்கையில் நடக்கின்றன. அதற்கு அனுசரணைத் தரப்பு வகிப்பது நோர்வே. இவ்வளவும்தான் நமக்கு இதுவரை தெரிந்த சங்கதிகள். ஆனால், இப்போது இந்த அமைதி நடவடிக்கைகளுக்கு நான்கு இணைத் தலைமை நாடுகள் அல்லது அமைப்புகள் தலைமை வகிக்கின்றன என்ற புதிய விடயம் மெல்லக் கட்டவிழ்ந்திருக்கிறது.

அமைதி முயற்சியில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்புகளும் இணங்கி இந்தப் பொறுப்பை இந்த நான்கு நாடுகளிடமும் ஒப்படைத்தனவா அல்லது அவை நான்கும் தம்பாட்டில் தமது தலையை உள்ளே நுழைத்து அமைதி முயற்சிகளுக்கான இணைத் தலைமைப் பொறுப்பைத் தாமாகவே சுவீகரித்து ஏற்றுக்கொண்டனவா என்பதும் தெரியவில்லை.

இந்தியா போன்ற உப கண்ட வல்லாதிக்க நாடு ஒன்று அருகில் இருக்கும்போது உலகின் பெரும் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய - வல்லரசு வலிமையுடைய - அமைப்புகள் ஒன்றிணைந்து இலங்கை சமாதான நடவடிக்கைகளின் இணைத் தலைமைப் பொறுப்பைத் தம்பாட்டில் ஏற்றிருப்பதை இந்தியா எப்படி நோக்கப் போகின்றது என்ற கேள்வியும் எழுகிறது.

எது, எப்படியோ ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்குக் காலம் காலமாகச் செய்யப்பட்டு வரும் அநீதிகளை - அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை - ஆராய்ந்து, தீர்வு காணும் ஒரு முயற்சியில் இவ்வாறு சர்வதேச சமூகம் கலப்பது நல்லதோர் நடவடிக்கை. தமிழர்களுக்கு நம்பிக்கை தரும் போக்கு. பௌத்த, சிங்கள மேலாண்மைவாதத்தின் குறுகிய செயற்பாட்டுப் போக்கையும்,நோக்கையும் சர்வதேச சமூகம் நெருங்கி நின்று பார்த்தறிய - கண்டு உணர - நல்ல வாய்ப்பை ஏற்படுத்தும் பொன்னான சந்தர்ப்பம்.

சமாதான முயற்சிகளுக்கான இணைத் தலைமைப் பொறுப்பேற்கும் நாடுகள் சமாதான முயற்சிகளை இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளை வலிந்து - வற்புறுத்தி - தேவைப்பட்டால் கடிந்து - கூறுவதற்கு உரிமையுடையவை. அதில் தப்பில்லை.

அதேசமயம் அந்தத் தலைமைப் பொறுப்பில் இருப்பவற்றுக்கு அதன் காரணமாகச் சில கடப்பாடுகளும் தாமாக வந்து சேர்ந்து விடுவதை அவை மறந்து விடக்கூடாது. அந்தக் கடப்பாட்டுப் பொறுப்புகளை ஒதுக்கி நடக்கவும் கூடாது.

இரண்டு தரப்புகளுக்கு இடையிலான சமாதான நடவடிக்கைகளுக்குத் தலைமை வகிக்கும் நாடுகள் இரண்டு தரப்பையுமே சமனாக நோக்கும் பொறுப்புடையவை. அப்போதுதான் அவை நீதி செய்யமுடியும்.

இந்த இரண்டு தரப்புகளில் ஒன்றான புலிகளைத் தடை செய்யப்பட்ட அமைப்பாகப் பிரகடனப்படுத்தி, அதனைத் தீண்டத்தகாத - அதன் பிரதிநிதிகளை அந்நியப் பிரகிருதிகளாக அறிவித்து - அவர்களின் அமைப்பு தனது நாட்டுடன் தொடர்பே படக்கூடாத இயக்கம் எனக் கூறிக்கொண்டு, சமாதான முயற்சிகளுக்கு இணைத் தலைமை வகிக்க முடியாது; வகிக்கக்கூடாது. அப்படி வகிப்பது முறையற்றது; நீதியின்பால் பொருந்தாது.

இணைத் தலைமை நாடுகளில் ஒன்றான அமெரிக்காவுக்கும், மற்றொன்றான ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இப்போது தலைமை வகிக்கும் பிரிட்டனுக்கும் இவ்விடயங்கள் சமர்ப்பணம்.

அவை என்ன பதில் கூறப்போகின்றன?

# எதிர்காலத் தேவைகளின் அடிப்படையிலேயே மீனவருக்கான உபகரண உதவி அமையவேண்டும்

## கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை21

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உபகரண உதவிகள் எதிர்காலத் தேவைகளின் அடிப்படையில் அமையவேண்டும்.

கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்ற பசுபிக் ஆசியவள நிலையப் பதில் தலைவர் இனோயூ றொய்கோ விடம் அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமாசத்தலைவர் கூறியதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் வலை, படகு போன்றன மூலம் கடலில் 10 கிலோமீற்றர் தூரத்துக்குள்தான் கடற்றொழிலை மேற்கொள்ள முடியும்.

இதன்மூலம் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அப்பகுதியில் வளப்பற்றாக்குறை ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

தற்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு படகு,வலை போன்ற உபகரணங்களை வழங்கிவருகின்றன. இது வரவேற்கத்தக்க விடயம்தான்.

இருப்பினும் இந்த உபகரணங்கள் மூலம் 10 கிலோமீற்றர் தூரமான கடற்பரப்பிற்குள் மட்டுமே மீனவர்கள் தொழிலை மேற்கொள்ள முடியும். தொடர்ந்து இப் 10 கிலோமீற்றர் பிரதேசத்திற்குள் தொழிலை மேற்கொள்வோமானால் தற்போது ஓரிரு கிலோகிராம் அளவில் பிடிக்கப்படும் மீன்களை கிராம் கணக்கில் மட்டும் பிடிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். அதாவது வளப் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்புள்ளது.

ஒரு கடற்றொழிலாளி கிராம் கணக்கில் மீனைப் பிடித்து விற்றால் அவரது குடும்பநிலை எதிர்காலத்தில் கேள்விக்குறியாகிவிடும்.

எனவே, எதிர்காலத்தையும் கவனத்தில் கொண்டு கடலில் கணிசமான தூரத்திற்குச் சென்று நாள் கணக்கில் கடலில் தங்கியிருந்து தொழில்செய்ய வசதியான படகுகள் மற்றும் ஆழ்கடல் வலைகள் போன்றவற்றை கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்கான திட்டங்களை அரசசார்பற்ற நிறுவனங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதன் மூலம் கடற்றொழிலாளரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த முடியும் - என்றார் அவர். (ஒ-203-202)

# புதுக்குடியிருப்பில் இன்று பிரிட்டிஷ் நிபுணர் சிகிச்சை

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் பிரிட்டனில் இருந்து வருகை தந்திருக்கும் மனநல மருத்துவ சிகிச்சை நிபுணரினால் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மனநல சிகிச்சைகள், ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

நித்திரையின்மை, மனச்சோர்வு, நீண்ட நாள் தலையிடி, தலை, உடல் விறைப்பு போன்ற பாதிப்புகள் உள்ளவர்களுக்கு விசேடமாக சிகிச்சை வழங்கப்படவுள்ளன.

இதில் பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பகுதியில் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-204)

## சிவராம் கொலை வழக்கு: சாட்சிகள் அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு

பிரபல பத்திரிகையாளர் மாமனிதர் சிவராம் படுகொலை வழக்கில் சாட்சிகளின் அறிக்கையொன்றை அடுத்த மாதம் இரண்டாம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கடுவெல நீதிவான் சம்பர ஜானகி ராஜரட்ண கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்கள பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் கடுவெல நீதிமன்றத்தில் நடைபெற்றபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்கின் பிரதான சந்தேக நபரை பிணையில் விடுதலை செய்யுமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளையும் நீதிவான் நிராகரித்தார்.வழக்கு விசாரணை ஓகஸ்ட் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க-3)

# புதிய பட்டதாரி நியமனங்களுக்கேற்ப அலுவலகங்களில் தளபாடங்கள் இல்லை

## இதனால் உயரதிகாரிகளுக்கு நெருக்கடி

யாழ்ப்பாணம்,ஜூலை21

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பணிமனைகளில் அதிக எண்ணிக்கையான பட்டதாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களுக்குப் போதுமான தளபாட வசதிகள் இல்லாதுள்ளன. இதனால் உயரதிகாரிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர்.

பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகளில் புதிய பதவிகளின்கீழ்முதல் தடவையாக பல பட்டதாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடைய கடமைகள் குறித்து தெளிவின்மை காணப்படுவதாகவும்- இவர்களுக்கான இடங்களை வழங்குவதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

பல அலுவலகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை மட்டும் கொண்டுள்ளன. அத்தகைய அலுவலகங்களில் மேசை, கதிரை போன்ற தளபாடங்களுக்குப் பற்றாக்குறையும் நிலவுகிறது.

இதற்கு, வேண்டிய முன்நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதால் நிலவும் இத்தகைய நெருக்கடிகள் விரைவில் களையப்படவேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்புகள் தெரிவித்தன. (ஒ-68)

## எஸ்.பி.திஸநாயக்கவுக்கு ஊழல் வழக்கில் விடுதலை

1994 இற்கும் 2000 இற்கும் இடைப்பட்ட காலத்தில் வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்தார் என ஐ.தே.கட்சி தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்கவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவரை நிரபராதி என்று தெரிவித்து நீதிமன்றம் விடுதலை செய்தது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரோஹினி பெரேரா இந்தத் தீர்ப்பை நேற்றுமுன்தினம் வழங்கினார்.

லஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் எஸ்.பி.திஸநாயக்கவை சிறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். எஸ்.பி.திஸநாயக்கவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லையென தெரிவித்து நீதிமன்றம் அவரை விடுவித்தது. (க-3)

# பாடசாலையில் சேர்ப்பதற்கு லஞ்சம் வாங்கியதாகக் குற்றச்சாட்டு

## அதிபருக்கு விளக்கமறியல்

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மாணவர் ஒருவரைப் பாடசாலையில் சேர்த்துக்கொள்வதற்காக 2ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பாடசாலை அதிபர் ஒருவரை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் நாவலப்பிட்டிப் பகுதி பாடசாலை ஒன்றின் அதிபராவார். சந்தேகநபரை லஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியிருந்தனர்.

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் 10 ஆம் வகுப்பில் கல்வி பயின்ற மாணவர் ஒருவர் ஆழிப்பேரலை காரணமாக இடம்பெயர்ந்து நாவலப்பிட்டிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளார். அந்த மாணவரை நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய மகாவித்தியாலயத்தில் சேர்த்துகொள்வதற்காக பாடசாலை அதிபர் 2ஆயிரம் ரூபா லஞ்சமாகப் பெற்றார் என்றே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (க)


## உதயவாக்கு

முறையறிந்து கீழ்ப்படிகிறவன் தன்னையும் மேன்மைப்படுத்துகிறான். தனக்கு ஆணையிட்டவரையும் மேன்மைப்படுத்துகிறான்.

- சித்பவானந்தர்.

## நாளை

ஆடி 06
வெள்ளிக்கிழமை
22.07.2005
திதி: பிரதமை
பிற்பகல் 3.10 வரை
நட்சத்திரம் : திருவோணம்
பின் இரவு : 12.58 வரை
சுபநேரம்: 6.01 - 7.31
ராகுகாலம்: 10.31 - 12.01
(யாவும் பழைய நேரப்படி)



# 100 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

19
07
2005



100

## திருமதி நன்னித்தம்பி செல்லம்மா

உரும்பிராயைச் சேர்ந்த திருமதி நன்னித்தம்பி செல்லம்மா தனது 100 ஆவது பிறந்த தினத்தை 19.07.2005 செவ்வாய்க் கிழமை உரும்பிராயில் உள்ள தனது மகள் எஸ். நடேஸ்வரியின் இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரைச்சகோதரர்களும் பிள்ளைகளான பாக்கியம், சின்னத் தங்கச்சி, நடராசா, அன்னம்மா, நடேஸ்வரி, பரமேஸ்வரி ஆகி யோ ருடன் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப் பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள் இன்னும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறார்கள்.

உரும்பிராய். (C/44275)(51-) -பிள்ளைகள்.

**தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டம் பிரிவின் ஆதரவுடன் ஸ்கந்தா நட்சத்திர விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும்**



ஸ்கந்தாவின் மைந்தனும், ஸ்கந்தாவின்
துடுப்பாட்ட வீரனும் முதலாவது ஸ்கந்தா-மகாஜனா
துடுப்பாட்டப் போரின் அணித்தலைவருமான
**அமரர் ஜெயசோதி துஸ்யந்தன்**(சுகந்தன்)
ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான
துடுப்பாட்டப்போட்டி

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்ட கழகங்கள் பங்குகொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர் கொண்ட தோற்பந்து துடுப்பாட்டப் போட்டி.

**இடம்** :-ஸ்கந்தா மைதானம் சுன்னாகம்
**விண்ணப்ப முடிவுதிகதி** :-27-07-2005 வெள்ளி
**அணிநிரல் ஒழுங்கு** :-29-07-2005 ஞாயிறு காலை 10 மணி
**விண்ணப்ப கட்டணம்:- 500/=**

விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடங்கள்

| வவுனியாவில் | கிளிநொச்சியில் | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| ஸ்போட்ஸ்கோணர் | தமிழீழ விளையாட்டுத்துறை. | உதயன் பணிமனை |
| நவீன பஸ்நிலையம் மேல்மாடி, வவுனியா. | கிளிநொச்சி. | 361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். |

**இப்போட்டியில்-----**
சிறந்த துடுப்பாட்ட வீரன்
சிறந்த களத்தடுப்பாளன்
சிறந்த பந்துவீச்சாளர்
சிறந்த ஆட்ட நாயகன்
சிறந்த தொடர்ஆட்ட நாயகன்
சிறந்த சகலதுறை வீரன்
ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு சிறப்புப் பரிசு வழங்கப்படும்




**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

மேலதிக தொடர்புகளுக்கு
0776128773

ஸ்கந்தா நட்சத்திர விளையாட்டுக் கழகம்,
சுன்னாகம்.

ஊடக அனுசரணை உதயன்

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



ஆண்டுகள் ஐந்து ஓடிமறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஓங்கிய நீள் நெடு நினைவாய்
உங்கள் நினைவுகள் நாளும் எம்முடன்....!
நீத்தல், வாழ்வின் முடிவு அல்ல
புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்.
உங்கள் நினைவுகளில்
நாங்கள் வாழ்வதால்
இந்த அகிலம் உள்ள வரை
உங்கள் வாழ்வு தொடரும்....!

– குடும்பத்தினர் –

தோற்றம்
26.06.1941

மறைவு
14.08.2000

அமரர்
## தம்பிப்பிள்ளை
## சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி.

## தென்னை அபிவிருத்தி சபை அலுவலர் மூலம்

# விதைத் தேங்காயின் தரத்தை உறுதிப்படுத்தி நாற்று உற்பத்தியை மேற்கொள்ளவேண்டும்

## பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவுறுத்து

பரந்தன்,ஜூலை21

விதைத் தேங்காய்களின் தரத்தை தென்னை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்திய பின்னரே நாற்று உற்பத்தியை மேற்கொள்ளுங்கள்.

- இவ்வாறு தென்னம் நாற்று உற்பத்தி செய்வோருக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழர் தாயகப் பகுதிகளில் தரமற்ற தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் - இதனால் அவற்றைப் பயிரிடுவோர் நஷ்டமடைய நேரிடுவதாகவும் கூறப்படுகின்றது. இதனைப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கவனத்தில் எடுத்தே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது குறித்து பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்ததாவது:-

தமிழர் தாயகப் பகுதிகளில் தரமற்ற தென்னம் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவது எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நாற்றுகளைப் பயிரிடுவோர் நஷ்டமடைகின்றனர்.

தென்னை நாற்றுகள் நடப்பட்டு பயன்தர சுமார் 5 வருடங்கள் தேவைப்படுகின்றது. நல்லின விதைத் தேங்காயிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட தென்னம் நாற்றை நடுகை செய்தால் மட்டுமே தென்னை மரத்தினால் முழுப் பயனைப் பெறமுடியும்.

தரமற்ற நாற்றுகளைப் பயிரிடுவோர் பண நஷ்டத்தை மட்டுமன்றி காலம் மற்றும் உழைப்பு விரயங்களையும் எதிர்கொள்கின்றனர்.

இதனைத் தடுக்கவும் தென்னை வளத்தை மேம்படுத்தவும் நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இதன்படி தென்னை நாற்றுகளை உற்பத்திசெய்வோர் விதைத் தேங்காய்கள் நல்லினம் என்பதை தென்னை அபிவிருத்தி சபை அலுவலர்கள் மூலம் உறுதிப்படுத்திய பின்னரே நாற்று உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் வீண் விரயங்களைத் தவிர்க்கமுடியும்.

அத்துடன், தென்னை அபிவிருத்திச் சபையின் அங்கீகாரம் இன்றி உற்பத்திசெய்யப்படும் தென்னம் நாற்றுகள் விற்பனைக்கு அனுமதிக்கப்படமாட்டாது. இந்த நடைமுறையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர்கள் கண்காணித்து நெறிப்படுத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-352)

## புதுக்குடியிருப்புக் கடைகளில் சுகாதாரப் பிரிவினர் சோதனை

புதுக்குடியிருப்பு,ஜூலை21

கடந்த 14ஆம் திகதி புதுக்குடியிருப்பு நகரத்திற்கு உட்பட்ட உணவு விடுதிகள் சிற்றுண்டிச்சாலைகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பலசரக்குக்கடைகள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சில கடைகளில் விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

காலாவதியான சில பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அழிக்கப்பட்டன.

தமிழீழ சுகாதார சேவையினர் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச சபையினர் அடங்கிய குழுவே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன. (த-353)





வவுனியா கலை இலக்கிய வட்டத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் இடம்பெற்ற அகளங்கனின் 'பாஞ்சாலி சபதம்' நாட்டிய நாடகத்தின் ஒரு காட்சியை முதலாவது படத்தில் காணலாம்.

இலக்கிய வட்டத்தின் 'மருதம்' சஞ்சிகையின் ஆறாவது இதழை இணை ஆசிரியர் கந்தையா ஸ்ரீகணேசனிடம் இருந்து வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி க.பேணாட் பெற்றுக்கொள்வதை அடுத்துள்ள படத்தில் காணலாம். (ஐ)

## அறிவியல்நகர் வேதா குடியிருப்பில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு

கிளிநொச்சி,ஜூலை21

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட வேதா குடியிருப்பில் குடிதண்ணீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் அந்தக் குடியிருப்பில் வசிக்கும் மக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அங்கு அமைக்கப்பட்டுள்ள பல கிணறுகள் உவர் தன்மையுடையதாகக் காணப்படுகின்றன.

இன்னும் சில கிணறுகள் இயந்திரங்கள் மூலம் தோண்டப்பட்டு கட்டப்படாத நிலையில் உள்ளன.

இங்கு வசிக்கும் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் அலைந்து திரிகின்றனர். மிக விரைவில் தமக்கு குடிதண்ணீர் வசதியை உரியவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என இந்த மக்கள் எதிர்பார்க்கின்றனர்.(த-301)

## புளியம்பொக்கனை - கல்லாறு வீதியின் சீரமைப்புப் பணி இடைநிறுத்தம்

பரந்தன்,ஜூலை21

புளியம்பொக்கணை - கல்லாறு வீதியின் சீரமைப்புப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இவ்வீதி தொடர்ந்து மோசமான நிலையில் உள்ளது. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வீதியின் இருமருங்கிலும் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டபோதும் நடுவீதி குன்றுங்குழியுமாக உள்ளது. இதனால் வீதியில் விபத்துகள் ஏற்படும் அபாயநிலை காணப்படுகிறது.

மழை காலத்திற்கு முன்னர் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்படாவிட்டால் இவ்வீதி மிக மோசமாகப் பாதிப்படைவதுடன் மக்கள் போக்குவரத்தில் பெரும் இ[illegible]ளை எதிர்கொள்ள நேரிடும் என பொ[illegible] கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-352-202)

## மாகாணமட்டத் தமிழ்த்தினப் போட்டிக்கு தகுதிபெற்ற முல்லை. மாவட்ட மாணவர்கள்

புதுக்குடியிருப்பு,ஜூலை21

முல்லைத்தீவு மாவட்ட தமிழ்மொழித்திறன் போட்டிகள் அண்மையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

இப் போட்டிகளில் வெற்றிபெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களினதும் பாடசாலைகளினதும் விவரம் வருமாறு:-

**வாசிப்பு**

பிரிவு 1: ஆ.கர்ணன் (அனிஞ்சியன்குளம் அ.த.க.).

பிரிவு 2 - சு.மதுசுயா (மல்லாவி.ம.க).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

பிரிவு 1: மா.துவாரகா (கைவேலி கணேசா வித்தி.)

**பேச்சு**

பிரிவு 1: ப.தயாளினி (மல்லாவி ம.க),

பிரிவு 2: ஜெ.நிரோஜிதா (வித்தியானந்தாக் கல்லூரி).

பிரிவு 3: யோ.தீபனா (கற்சிலைமடு அ.த.க.பா.),

பிரிவு 4: க.சோபனா (மல்லாவி ம.க.), சு.சேதுமதி (வற்றாப்பளை ம.வி.)

**பாவோதல்**

பிரிவு 1: கி.பிரியங்கா (யோகபுரம் ம.வி.),

பிரிவு2: ச.நிவாசினி (யோகபுரம் ம.வி.),

பிரிவு3: இ.ஜயஞ்செலா (வித்தியானந்தாக் கல்லூரி),

பிரிவு 4: இ.தேவனா (மல்லாவி ம.வி.)

பிரிவு 5: பா.மேகலா (வற்றாப்பளை ம.வி.)

**இசையும் அசைவும்**

பிரிவு 1: சி.கோபிகிருஸ்ணா (கள்ளப்பாடு அ.த.க.பா.).

**தனி இசை**

பிரிவு2 : இ.வினோதினி (வள்ளிபுனம் க.உ.வி.).

பிரிவு 3: கு.துஷிந்தன் (மல்லாவி ம.க.),

பிரிவு4 : கு.நிரோஜினி (புதுக்குடியிருப்பு ம.க.).

பிரிவு 5: கோ.கோசலா (வித்தியானந்தாக் கல்லூரி).

**தனி நடனம்**

பிரிவு 1: ச.கீர்த்திகா (ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி.).

பிரிவு 2: இ.எழில்மதி (புதுக்குடியிருப்பு).

பிரிவு 3: அ.சாம்பவி (வித்தியானந்தாக கல்லூரி),

பிரிவு 4: கு.பிரதீபா (யோகபுரம் ம.வி.),

பிரிவு 5: சத்தியகலா (மல்லாவி ம.க.).

**குழு இசை**

குழு1 - செம்மலை ம.வி.

குழு 2 - புதுக்குடியிருப்பு ம.க.

**நடனம்** - யோகபுரம் ம.வி.

**நாடகம்** - புதுக்குடியிருப்பு ம.க.

**வில்லுப்பாட்டு** - முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பா.

**விவாதம்** - புதுக்குடியிருப்பு ம.க.

**தமிழறிவு** - முல்லைத்தீவு ம.வி.

**சிந்துநடை நாட்டுக்கூத்து** - பெரிய புளியங்குளம் அ.த.க.

**தென்மோடி நாட்டுக்கூத்து** - ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்

**விசேட கூத்து** - ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம். (த-353-202)




## முல்லை.இளைஞர் சேவை மன்றம் நிதி ஒதுக்கீட்டில் புறக்கணிப்பு

புதுக்குடியிருப்பு,ஜூலை21

நிதி ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை மன்றம் புறக்கணிப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்த ஆண்டு இளைஞர் விவகார அமைச்சு இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இதுவரை முல்லை. மாவட்ட இளைஞர் சேவை மன்றத்துக்கு நிதி ஒதுக்கவில்லை என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாண்டுக்கான செயற்றிட்ட முன்மொழிவுகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டபோதும் அவற்றில் எதற்கும் நிதி ஒதுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மற்றைய மாவட்டங்களில் இளைஞர் சேவை மன்றங்கள் ஊடாகப் பயிற்சிகள் உட்படப் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் -

ஆனால், போரினாலும் ஆழிப்பேரலையினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நிதி ஒதுக்கப்படாமை கவலையளிப்பதாகவும் -

மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.(ஒ-153)



கிளிநொச்சி மாவட்ட கால்நடை வைத்திய நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. திறக்கப்பட்ட வைத்திய நிலையத்தின் தோற்றத்தை முதலாவது படத்தில் காணலாம். கட்டடத்தினை வடக்கு - கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கே.சிவலிங்கம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பதையும் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி திருமதி கௌரிசங்கர் ஆகியோர் உரையாற்றுவதையும் ஏனைய படங்களில் காணலாம். (படங்கள் மு.கந்தசாமி, பரந்தன் செய்தியாளர்)

A/L (2006, 2007) மாணவர்களே!

GIT (Pascal)

உங்களுக்கான Pascal Program வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

| Days | Batch | Time |
|---|---|---|
| Wed. | I | 5-7 p.m. |
| Mon., Tue | II | 7-8 p.m. |
| Mon., Wed. | III | 7-8 a.m. |

I Hour =20/-

பதிவுக் கட்டணம் இல்லை

August மாதப்பரீட்சையை அடிப்படையாகக்கொண்டது

C.B. COMPUTER ACADEMY
T.P.: 4590291 Station Road, Kondavil



C.B. COMPUTER ACADEMY
T.P.:-021-4590291 Station Road, Kondavil

எமது நிறுவனத்தில் பின்வரும் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

Diploma in MS-office
Diploma in Computer Hardware
Diploma in Internet & E-mail
Diploma in Desktop Publishing

அரச அங்கீகாரம்பெற்ற தகவல் தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். வார, வாரஇறுதிநாலை, இரவு நேரங்களில் வகுப்புகள் நடைபெறும்.



ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் நரசிம்ம நாயுடு

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் இன் அறை எண் 9,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 9122836. (37907)


# சிறுவர்களுக்கான மேம்பாட்டு நிகழ்வு

தென்மராட்சி,ஜூலை21

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டு நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு வியாபாரிமூலை பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அறவழி நிலையமும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் இணைந்து இந்நிகழ்வினை நடத்தவுள்ளன.

அறவழி நிலைய இயக்குநர் வீ.ஜி.தங்கவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சுனாமி செயலணிக் குழுப் பணிப்பாளர் க.பாலையா கலந்துகொள்வார்.

நிகழ்வுக்கு கௌரவ விருந்தினர்களாக யாழ். செயலக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவன யாழ். மாவட்ட முகாமையாளர் திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

சிறுவர் ஆற்றல் மேம்பாட்டு நிகழ்வுகளாக பட்டம் பறக்க விடுதல், மாலை கட்டுதல், கோலம் போடுதல், ஓவியம் வரைதல், சிறுவர் அனுபவம் பகிர்தல், சிறுவர்களின் கலை நிகழ்வுகள் ஆகியவை இடம்பெறும். (-202-117)

# ஆய்வுகூட பரிசோதனைகள்: சாவகச்சேரியில் இலவச சேவை

லண்டன் தமிழ் மருத்துவர் சங்கத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி நோயாளர் நலன் புரிச் சங்கத்தினால் நடத்தப்படும் இலவச மருத்துவ சேவை நிலையத்தில் ஆய்வுகூடப் பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன.

இன்று வியாழக்கிழமை இப் பரிசோதனைகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி விநாசித்தம்பி வீதியில் உள்ள மருத்துவ சேவைகள் நிலையத்தில் வாரத்தில் செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை ஆய்வுகூடப் பரிசோதனைகள் நடைபெறுமென சங்கத் தலைவர் அ.சி.குமாரசாமி அறிவித்துள்ளார். (202-117)

# புதிய கட்டடத் தொகுதிக்கு ரூ.52 மில்லியன் ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜூலை21

சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிய கட்டடத் தொகுதிகள் அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி 52 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

ஆஸ்பத்திரி நிர்வாக அலகு, ஆண், பெண் விடுதிகள், தண்ணீர் விநியோகம் ஆகியவற்றுக்கே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் கட்டட வேலைகள் ஆரம்பமாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.(202-117)

# காணிகொள்வனவு

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்காக காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய மாணவர்களின் பெற்றோர், நலன் விரும்பிகளின் நிதி மூலம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மேற்குப் பக்கமாகவுள்ள தனியார் காணியே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைச் சமூகத்தினர் இணைந்து மேற்படி காணியின் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (202-28)

# ஒன்றுகூடல்

யாழ்.புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் 50 ஆவது ஆண்டு விழா தொடர்பாக இந்த ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளதால் சகல பழைய மாணவர்களையும் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 11 - 1935



உதிர்வு 21 - 07 - 2004

அமரர் கபிரியேற்பிள்ளை ஆசீர்வாதம்

அணையாத தீபமாய்
வாழ்வில் நல்வழிகாட்டி
ஒளியூட்டி வாழவைத்த
எங்கள் குலவிளக்கே!
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
கலையாத நினைவுகளுடன்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

(37752) (39-கு18கு13)


Jaffna College Institute of Technology
Vaddukoddai, Jaffna,
Sri Lanka

Register for the following Courses immediately.

**Diploma Courses**

1. Computer Programming & Data Processing
Duration: 1yr full time
Course fee: 5000/-

2. Civil Diploma
(Covers City & Guilds construction Industry Technician Diploma Syllabus)
Duration: 1yr
Course fee: 7000/-

**Computer Certificate Courses**

1. MS OFFICE (Evening batch 1.00 pm)
* MS Word
* MS Excel
* MS Access & Power Point
Duration: 4 months
Fee: Rs 2500/-

2. Certificate in Maya
Advantages: Advertisement creations, Computer Games 2D Background Creations, Miracle Animation, 3D Modelling Objects
Duration: 3months
Fee: Rs 4000/-

3. Certificate in Auto CAD & Engineering Drawing
Duration:3months
Fee: Rs 3000/-

4. Computer Hardware
Duration: 3months
Fee: Rs 2000/-

FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:
Director
Jaffna College Institute of Technology
Vaddukoddai.

T.Phone:- 0602213139 Email:- jcit@sltnet. IK

(C-44242) (39-13-18)



சேவை நிறுவனங்களின் வழிகாட்டிக்கோவை தயாரிப்பு - 2005

TRRO LTD UNHCR

TRRO நிறுவனம் UNHCR அனுசரணையுடன் செயற்படுத்துகின்ற சேவை நிறுவன வழிகாட்டிக் கோவை தயாரிப்பதற்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச தொண்டு நிறுவனம் மற்றும் சமய சமூக தொண்டர் நிறுவனம் சார்ந்த தகவல்களைத் திரட்டி வருகின்றது. இதுவரை வினாக்கொத்துப் படிவத்தைப் பெற்று தங்களது நிறுவனத்தின் சேவைபற்றிய தகவல்களை அறியத்தராதவர்கள் எமது நிறுவனத்தில் அப்படிவத்தைப் பெற்று தமது நிறுவனம் சார்ந்த விவரங்களை வழங்கலாம். ஏற்கனவே அப்படிவத்தை பெற்றோர் இந்தச்சேவை வழிகாட்டி கோவை வெளியீட்டைத் துரிதப்படுத்த இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன் வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு:-
T.P.: 021 222 2416
FAX- 021 222 2200
E-Mail- trro@sltnet. lk

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(சி-44257) (39-18-13)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1924-05-02



ஆண்டவன் அடியில் 2005-06-21

திருமதி அரியகுட்டி சவீனம்மா

"சீவியத்தில் நேசித்தவர்களே!
என்னை மரணத்திலும் மறவாதீர்கள்"
பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பின் உறைவிடமாய் இருந்த
எங்கள் ஆருயிர் அம்மாவே!
எங்களை விட்டுப் பிரிந்து
மாதம் ஒன்று ஆனாலும்
நாங்கள் உங்களை மறப்போமா?
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21.07.2005) வியாழக்கிழமை இராசாவின்தோட்ட வீதியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ராஜா ஸ்ரோர்ஸ்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(37955) (39-13-18)


Study in India

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

A/L சித்தியடைந்த மாணவர்களும், 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

Garden City College Affiliated to Bangalore University
SSM College of Engineering affiliated to Anna Engineering University
Muthayammal Art and Science College affiliated to Periyar University
Bishop Heber College affiliated to Bharathidasan University

Courses

• B.E. Information Technology, • B.E. Computer Science and Engineering, • B.E. Electronics and Communication Engineering, • B.E. Mechanical Engineering, • B.Sc. Information Technology, • B.Sc. Computer Technology, • B.Sc. Apparel and Fashion Technology, • M.S.C. Information Technology • B.Sc. (Computer Science), • B.Sc. (Fashion & Apparel Design), • B.Sc. (Microbiology), • B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology), • BCA. (Bachelor of Computer Applicants), • BBM. (Bachelor of Business Management), • BHM. (Bachelor of Hotel Management), • B.A. (Journalism), • B.Com (Computers) • B.Sc. Maths, • B.Sc. Phys • B.Sc. Electronics • B.Sc. Chemistry • B.Sc. Computer Science

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical Collegeல் சேர்ந்து 3 வருட Diplomaவை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வியயில்கின்றனர்.

- ஆண்கள் - பெண்களிற்கு தனியான விடுதி வசதிகள்
- Student Visa எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்
- கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

2005ல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் Pending Results உடன் இவ்வருடமே கல்லூரிகளில் சேர்ந்து பாடநெறிகளை தொடர முடியும். இதனால் மாணவர்கள் ஒரு வருடத்தை சேமிக்க முடியும்

அனேகமான கல்லூரிகள் யூலைமாதம் இரண்டாம் கிழமை தமது பாடநெறிகளை தொடக்கவிருப்பதால், உடனடியாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

MBBS இலங்கை Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட Crimea Medical Institute - University (Ukraine) இல் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது ~ A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு Call 0777 - 767818 / (011) 4512591

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06.

SKAds&Print's



நல்லூர் பிரதேச செயலகத்தி னால் நடத்தப்பட்ட கலாசார விழா வில் கௌரவிக்கப்பட்ட கலைஞர் களைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

# நல்லூர்ப் பிரதேசத்தைச் சேர்ந்த 21 கலைஞர்கள் கௌரவிப்பு

நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய கலா சார விழாவில் நல்லூர் பிரதேச செயலர் பிரி வில் வதியும் 21 கலைஞர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிக்கப்பட்ட கலைஞர்களின் விவ ரங்கள் வருமாறு:

இராசையா பீதாம்பரம் (நாடகம்), சங்கரப் பிள்ளை புவனேந்திரன் (நாடகம்), வடிவேலு செல்வரத்தினம் (இசை நாடகம்), டானியல் தேவதுரம் (இலக்கியம்) அராலியூர் ந.சுந் தரம்பிள்ளை (வானொலி நாடகம்), சுந்தரலிங் கம் கனகசபாபதி (தவில்).

திருமதி திருச்செல்வம் புஸ்பராணி (தவில்), வி.எஸ்.மாணிக்கம் (ஓவியம்), திருமதி சோம சுந்தரக்குருக்கள் நாகபூசணி (கண்ணாடி ஓவி யம்), வல்லிபுரம் குமாரசாமி (நாதஸ்வரம்), திருமதி சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி (நாதஸ் வரம்), இராசையா ஸ்ரீதரன் (வில்லிசை), முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் (மெல் லிசை).

திருமதி மனோகர் மங்கையர்க்கரசி (நட னம்), செ.பொன்னுத்துரை (ஆர்மோனி யம்), செல்வி ஜயாத்துரை ஜெயமணிதேவி (மிருதங்கம்), எஸ்.பாலசிங்கம் (இசை), திருமதி செல்லத்துரை தங்கலட்சுமி (இசை), எஸ்.சர்வேஸ்வரசர்மா (வயலின்), செல்வி பாக்கியலட்சுமி நடராசா (வயலின்), வை.திரு ஞானசம்பந்தர் (பண்ணிசை).

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண் பாட்டுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, நல்லூர் பிரதேச மகளிர் அரசி யல்துறைப் பொறுப்பாளர் பூமகள், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி க.தெய்வேந் திரம் ஆகியோர் கலைஞர்களைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். (ஓ-86)

## எழுத்தாக்கப் போட்டி

கோப்பாய்,ஜூலை21

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைக ளுக்கிடையிலான சமூகக்கல்வி எழுத்தாக் கப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என கோட்டக் கல் விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-72-202)

## புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணி மனைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப் படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இதுவரை காலமும் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த இந்த அலுவலகத்திற்கு, தற் போது நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-204-203)

## சாவகச்சேரியில் இன்று வேல் பவனி

தென்மராட்சி, ஜூலை 21

சாவகச்சேரி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய வேல் பவனி இன்று வியாழக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆலயத்திலிருந்து அரம்பமாகும் வேல் பவனி டச்சு வீதி, இராமலிங்கம் வீதி, கண்டி வீதி, தபால் நிலைய வீதி, பெருங்குளம் சங் கத்தானை வீதி ஊடாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும். (ஓ-117-204)

## 'யாழ்.ரெக்' நிறுவன அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூலை 21

'யாழ் ரெக்' கணனி நிறுவன அறிமுக விழாவை முன்னிட்டு மானிப்பாய் ரோட்ட ரிக் கழகத்தின் அனுசரணையுடன் மாபெரும் பல்லூடகக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு யாழ். ரெக் நிறுவன அறிமுக நிகழ்வும் தமிழ் இறுவட்டின் வெளி யீடும் தொடர்ந்து கருத்தரங்குகளும் இடம் பெறும். (ஓ-202)

# பொது அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூலை21

யாழ். மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி யிலிருந்து மீள்கட்டுமானம் மற்றும் புனர மைப்புப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள் ளது.

யாழ். ஆரியகுளம் சனசமூக நிலையம், யாழ். பெஸ்கி சனசமூக நிலையம், குருநகர் சனசமூக நிலையம், புனித மரியாள் சனசமூக நிலையம், முத்தமிழ் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கும் -

பாசையூர் கொலனி வீதி, நாவாந்துறை சேமக்காலை ஆகியவற்றின் புனரமைப்புக் கும் -

குருநகர் கலாசார மண்டபம், புனித மரியாள் படிப்பகம், புனித மரியாள் பாலர் பாடசாலை ஆகியவற்றிற்கும் -

இந்த நிதி யாழ். அரச அதிபர் ஊடாக வழங்கப்படவுள்ளது. (ஓ-ரி)

# குடிதண்ணீர் வசதியில்லாது உடுப்பிட்டி வடக்கு மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூலை21

உடுப்பிட்டி வடக்குப் பிரதேசத்தில் ஆயி ரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங் கள் குடிதண்ணீர் வசதியின்றி சிரமப்படுகின் றன.

- இவ்வாறு உடுப்பிட்டி வடக்குப் பிரதேச முன்னேற்றச் சங்கத்தலைவர் தே.பிரசாத் தெரிவித்தார்.

கெருடாவில், நாவலடி, ஊரிக்காடு, கம் பர்மலை, கொம்மந்தறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கணிசமான மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு ஆலயக் கிணறுகளையே நம்பி யுள்ளார்.

இந்நிலையில் தேசிய நீர்வழங்கல் வடி காலமைப்புச் சபை தொண்டைமானாறுப் பகுதியில் இருந்து வல்வெட்டித்துறை, ஊற ணிப் பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் குடி தண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

இத்திட்டத்தினை விரிவுபடுத்தி உடுப் பிட்டி வடக்குப் பகுதிக்கும் குடிதண்ணீர் வழங்கி உதவவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-185)

'நிகொட்' உதவித்திட்டத்தின் கீழ்

# விவசாயிகளுக்கு முதன்முறையாக இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள்

வலி.தெற்கு,ஜூலை21

யாழ்.மாவட்டத்தில் விவசாயிகளுக்கு முதன்முறையாக இரண்டு சக்கர உழவு இயந் திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிகொட் உதவித்திட்டத்தின் கீழ் புத்தூர் கமநல சேவைகள் நிலையத்தில் விவசாயிக ளுக்கான பல்வேறு விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது. இதில் வைத்தே இவை வழங்கப்பட்டன.

உடுவில் கமநல சேவைகள் நிலைய விவ சாயக் குழுக்களின் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் அரச அதிபர் கே.கணேஸ் பிர தம விருந்தினராகக் கலந்து கொண்டு உபகர ணங்களை வழங்கினார்.

நியாப் திட்டப்பொறியியலாளர் நவரட்ண ராஜா, யாழ்.மாவட்ட கமத்தொழில் சேவை கள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்த ரேசன், கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி.சாந்தசீலன், யாழ். மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவ னப் பொறுப்பாளர் க.சங்கர் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள், விசைதெளிகருவிகள், நெல்லுவெட்டி சூட்டிக் கும் இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங் கள், கைதெளிகருவிகள் போன்றவை இந் நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன.

இவை சம்பந்தப்பட்ட கமநல சேவை நிலையங்களூடாகவும் விவசாய சம்மேளனங் களூடாகவும், விவசாயிகளுக்குத் தனிப் பட்ட முறையிலான சுழற்சி முறைக்கடனடிப் படையிலும் விவசாயிகளுக்கு வழங்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-152)

## மாணவருக்கு கல்வி உபகரணங்கள்

நல்லூர்,ஜூலை21

நாயன்மார்கட்டு, பாரதி சனசமூக நிலை யத்தின் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு நிலையத் தலைவர் இ.மயில் வாகனம் தலைமையில் நடைபெறும்.

பெற்றோர்களை இழந்த பாடசாலை செல் லும் மாணவருக்குக் கல்வி உபகரணங்கள் இக்கூட்டத்தில் வழங்கப்படவுள்ளன. (ஓ-111)

## கூட்டுறவாளர்தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை21

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை நடத் தும் சர்வதேச கூட்டுறவாளர்தின விழாவை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தரம் 10, 11, 12, 13 ஆகியவற்றிற்கான கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமையும் சித்திரம், வினாவிடைப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம் திகதியும் நடைபெறும் என்றும் -

தரம் 6, 7, 8, 9 ஆகியவற்றுக்கான கட்டு ரைப்போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை யும் பேச்சுப்போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி யும் நடைபெறும் என்றும் -

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைச் செய லாளர் அறிவித்துள்ளார். (ஓ-202)

## நாய்களுக்கு கருத்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை21

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆண்,பெண் நாய்களுக்கான இலவசக் கருத்தடை சத்திரசிகிச்சையை பருத் தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்கொள்ளமுடியும்.

மேலதிக விவரங்களைத்தம் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளு மாறு சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் கேட்டுள்ளார். (222)

## ஆண்டு விழா

கைதடி,ஜூலை21

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலை யத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நிலையத்தலைவர் ச.கிருஷ்ணன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்துகொள்வார். கலை நிகழ்வுகளாக வளர்மதி கல்விக்கழக மாணவி களின் நடன நிகழ்வும் வளர்மதி நாடக கலா மன்றத்தினரின் தாகம் நாடகமும் மற்றும் அரியாலை சாரங்கா இசைக்குழுவின் இன்னி சையும் இடம்பெறவுள்ளன. (ஓ-75)




# பொலீஸாரின் கண்ணில் மண்தூவி மணல் கடத்துவோர் அதிகரிப்பு

தென்மராட்சியில் பொலீஸாரின் கண்க ளில் மண்தூவி விட்டு மணல்கடத்தும் சம்ப வங்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சம்பவம் ஒன்று கடந்த 13ஆம் திகதி வாகை யடிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் கொடிகாமம் பொலீஸார் சம்பவ தினத்தன்று வீதிச் சோதனையில் ஈடு பட்டிருந்தனர். அப்போது அவ்வழியாக மணல் ஏற்றி வந்த டிராக்டர் ஒன்றை அவர்கள் மறித்துச் சோதனையிட்டனர். அந்த டிராக்டர் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுள் ளதைப் பொலீஸார் கண்டு பிடித்தனர். டிராக்டரை பொலீஸ் நிலையம் கொண்டு செல்ல பொலீஸார் ஏற்பாடு செய்தனர்.

அப்போது வீதியோரமாக டிராக்டரை நிறுத்துவதாகச் சொல்லிய சாரதி அதனைக் கிளப்பிக்கொண்டு வேகமாகச் சென்று தப்பி விட்டார். செல்லும் போது டிராடர் பெட்டியைத் தானியங்கி உதவியால் அவர் உயர்த்திக் கொண்டு சென்றதால் பொலீஸாரால் சுட்டுப் பிடிக்கவும் முடியாமல் போய்விட்டதாகக் கூறப் படுகிறது. (ஓ-74)

தென்மராட்சிப் பகுதியில்

# விதவைகள், ஆதரவற்றோர் ஓய்வூதியம் அடுத்த மாதம் முதல் அதிகரிப்பு

தென்மராட்சி,ஜூலை21

தென்மராட்சிப் பிரதேசத்தில் விதவைகள், ஆதரவற்றோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு அடுத்த மாதம் முதல் ஓய்வூதிய முரண்பாடு கள் அகற்றுதல் தொடர்பான அரச பொது நிர் வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

இந்த ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பாக ஓய்வூதியர்களின் விவரங்கள்கோரும் படிவங் கள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஜூலை மாத ஓய்வூதியப் படிவத்துடனும் நேரடியாகவும் ஓய்வூதியர்களிடம் சேர்ப்பிக்கப்பட உள்ளன.

ஆசிரியர் ஒருவரின் ஓய்வூதியம் பெறு வோருக்கு மூன்று படிவங்கள் அனுப்பப் படுவதாகவும்-

அவற்றினைப் பூர்த்தி செய்து நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பிரதேச செய லக ஓய்வூதியக் கிளைக்குக் கிடைக்கச் செய்யு மாறும்- பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஓ-117)

## ஆங்கிலப் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஜூலை21

தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் பாட சாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு பேச்சு ஆங்கிலப் பயிற்சி வகுப்பினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் தமது விண்ணப்பங்களை மீசாலை வீரசிங்கம் மகா வித்தி யால அதிபரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகாம்பிகை பஞ்சலிங்கம்



சுதுமலை, ஈஞ்சடியைப் பிறப்பிடமாகவும் டச்சு றோட், சண்டிலிப்பாயை வதிவிடமாக வும் கொண்ட திருமதி கனகாம்பிகை பஞ்சலிங் கம் அவர்கள் 18.07.2005 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந் தரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நாகம்மா தம்பதியரின் அருமை மருமகளும் பஞ்சலிங் கத்தின் அன்பு மனைவியும் பாலகிருஷ்ணன், கிருஷ்ணரூபி, கிருஷ்ண லோஜி, கிருஷ்ணவேணி, கிருஷ்ணரூபன், சியாந்தினி (ஜேர்மனி), நிசாந்தி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலராணி, வசந் தன், ஜெயக்குமார், சந்திரசேகரன், சஞ்சீவன் (ஜேர்மனி), பாஸ்கரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் திசாந், பானுஜா, கௌசிகா, டிலக்சன், டிலானி, ஜனனி, ஜனார்த்தன், ஜெலக்சன், சங்கவி, கீர்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவராசா (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராசா, இரகு நாதன், நாகேஸ்வரி, திலகவதி ஆகியோரின் அருமைச் சகோதரியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2005) வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் சங்குவேலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பஞ்சலிங்கம் (கணவர்),
பிள்ளைகள்.

டச்சு றோட்,
சண்டிலிப்பாய். (37989)(32-13-18)

## இரத்தினம் சிவராசா



(பிரபல வர்த்தகர், ஆனைக்கோட்டை)

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இரத்தினம் சிவராசா அவர்கள் நேற்று (20.07.2005) புதன்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பாலாம்பிகையின் அருமைக் கணவரும் தர் சிக்கா, சாமினி (உயர்தர மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி), சிவானுஜன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அன்னலட்சுமி; காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் குருநாதன், நாகராசா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலலட்சுமி, பாலச்சந்திரன், பாலரஞ்சினி, பால குமாரி, பாலசரஸ்வதி, பாலகிருஷ்ணன், பாலகௌரி, பாலதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2005) வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கரையான்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி.சி.பாலாம்பிகை
(மனைவி).

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (37990)(32-13-18)

## 150 வீடுகளுக்கு புனரமைப்பு நிதி

தென்மராட்சி,ஜூலை21

வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிர தேசத்தில் 150 வீடுகளைப் புனரமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஸ் அறிவித்துள்ளார்.

கடந்த 2002 பெப்ரவரி 22ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின் னர் பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப் பட்ட பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட வுள்ளது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பாதிப்புக் குள்ளான வீடுகள் புனரமைக்கப்படவுள்ளதால் பயனாளிகளின் விவரங்களை அனுப்பிவைக்கு மாறு பிரதேச செயலரை அரச அதிபர் கோரி யுள்ளார். (ஒ-117)

## பொலிகண்டி கிழக்கு வீடமைப்புத் திட்டத்துக்கு நான்காம் கட்ட நிதி

யாழ்ப்பாணம்,ஜூலை21

பருத்தித்துறை, பொலிகண்டி கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிப்படைந்தவர்களுக் கான வீடமைப்புத் திட்டத்திற்கு 4ஆம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் நிதியுதவியுடன் ஐ.நா.வதிவிட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வீடமைப்புத் திட்டத்திற்கான நான்காம் கட்டக் கொடுப்பனவாக இருபது லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை ஐ.நா.வதிவிட நகர முகா மையாளர் கே.பரமேஸ்வரன் தனது அலுவல கத்தில் வைத்து பொலிகண்டி கிழக்கு அபிவிருத்திக்குழுப் பிரதிநிதிகளிடம் அண் மையில் வழங்கினார்.

இந்த வீடமைப்புத் திட்டத்திற்காக இது வரை 75 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக சமூக மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆர்.சாந்த குமார் தெரிவித்தார். (ஒ-ரி)

## சின்மயாமிஷனின் புலமைப் பரிசில்கள்

வலி.தெற்கு,ஜூலை21

இலங்கை சின்மயாமிஷன் நிறுவனம் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர் களுக்கு புலமைப்பரிசுகளை வழங்கவுள்ளது.

இதற்கு தற்போது தரம் 10 மற்றும் 12 இல் கல்வி கற்கும் மாணவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மாணவர்களின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகங்கள் மூலம் திரட்டப்படுகின்றன.

ஆழிப்பேரலையால் பெற்றோரை இழந்த - சொத்துக்களை இழந்த - வறுமைக் கோட் டுக்குக் கீழ் உள்ள - கல்வி கற்பதில் ஆர்வமும் ஆற்றலும் கொண்ட - மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசிலுக்குத் தெரிவுசெய்யப்படவுள் ளனர். (ஒ-152)

## தாக்குதல்களால் மூவர் காயம்

தென்மராட்சி,ஜூலை21

படுக்கையில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டார்.

கடந்த வெள்ளிக் கிழமை நள்ளிரவு இச் சம்பவம் மிருசுவில் வடக்கில் இடம்பெற் றது. இதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை அகிலேஸ்வரன் (வயது 30) என்பவர் வெட்டுக் காயங்க ளுக்கு இலக்கான நிலையில் சாவகச் சேரி மருத்துவமனை யில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

இதேவேளை, குட மியன் பகுதியில் தாக் குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலை யில் கணவனும் மனை வியும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதே இடத்தைச் சேர்ந்த எம்.அன்ரன் (வயது 52) அவரது மனைவியான அன் ரன் அன்னலட்சுமி (வயது 49) என்பவர் களே அனுமதிக்கப்பட் வர்களாவர். (ஒ-117)


## Oxfam

Oxfam GB is an International Non Governmental organization working with others to find lasting solutions to poverty and suffering. Oxfam has been working in Srilanka since 1986 and has been actively involved in water and sanitation provision, shelter, agriculture, genderequity and rights, food and security income, and legal literacy and rights. Oxfam supports work in the North, East and South. We are currently focused on the immediate response to the thousands of people affected by the Tsunami and ,working towards addressing the longer-term rehabilitation needs in the country.

Following vacancies are available in our Kilinochchi office.

**1.Programme Assistant-Gender and Protection (01)**
The ideal candidate should have at least A/L qualifications with one-year working experience in gender related issues. Degree in the relevant field preferred.

**2.Finance Assistant (01)**
The ideal candidate should have at least A/L qualifications with sufficient experience regarding accounting practices. Degree in the relevant field. preferred.

**3.Programme Assistant- Livelihood. (O2)**
The ideal candidate should have, at least A/L qualifications ,with one-year working experience in community level. Degree in the relevant field preferred.

**4.Office Assistant (01)**
The ideal candidate should be conversant with MS Word, Excel andAccess, You should have good typing, skills.

ALL candidates should be computer literate and fluent in English. In addition to this you must have the ability of writing reports,

Please email your CV and a covering letter explaining how You meet the criteria of the post to
HR Officer-North
Pcnorth@sltnet.lk or by mail to
**Oxfam GB,**
33 Kanagapuram, Kilinochchi

CLOSING DATE: 26th of July 2005
* Women are encouraged to apply
*Please note that only short listed candidates will be contacted. (சி/44271)(32-13-18)



## பதவி வெற்றிடம்

DIALOG GSM இன் அதிகாரமளிக்கப்பட்ட முகவரான THE PHONE SHOP நிறுவனத்தில் காசாளர் (CASHIER) பதவி வெற்றிடமாக உள்ளது.

இப்பதவிக்கு விரும்பிய தகுதியுள்ள ஆண், பெண் இருபாலா ரும் இன்றிலிருந்து 7 தினங்களுக்குள் நேரில் சமுகமளிக்கவும்.
(வயதெல்லை: 18 வயதுக்கு மேல்)

THE PHONE SHOP
(பஸ் நிலையம் முன்பாக)
நெல்லியடி.
☎ 021 2263770, 0777 570110.

(37960)(32-13-18)



## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்





இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ ராமகிருஸ்ண சாஸ்திரிகள்
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்- மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி),
யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373. (37991)(32.13.18)



## றோட் எஞ்சினியரிங் (பிறைவேற்) லிமிட்டட், கணேசபுரம், கிளிநொச்சி

## பதவிகளுக்கான வெற்றிடங்கள்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண் ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இவர் கள் தற்போது நடைபெறும் பால வேலைகள் (RBNE) CAARP, SATAART, NECORD ஆகியவற்றின் நிதிகள் ஊடாக வழங்கப்பட்ட வீதி வேலைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

1. சிரேஷ்ட பொறியியலாளர் -வெற்றிடம்- 01
2. கனிஷ்ட பொறியியலாளர் -வெற்றிடங்கள்- 02
3. சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வெற்றிடங்கள் - 02
4. Quantity Surveyor -வெற்றிடம் - 01
5. வேலை மேற்பார்வையாளர் (W.S) -வெற்றிடங்கள் - 02
6. வேலை மேற்பார்வை பயிலுநர் -வெற்றிடங்கள் - 03
7. கணக்காளர் (கம்பனி கணக்குகள்) -வெற்றிடம் - 01
8. வாகன சாரதி -வெற்றிடங்கள் - 02
9. வீதி றோலர் சாரதி -வெற்றிடங்கள் - 02
10. பைக்கோ சாரதி -வெற்றிடம் - 01
11. மெக்கானிக் (வாகனங்கள்) -வெற்றிடம் - 01

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 03.08.2005 ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர், றோட் எஞ்சினியரிங் (பிறைவேற்) லிமிட்டட், கணேச புரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
றோட் எஞ்சினியரிங் [பிறைவேற்] லிமிட்டட்,
கணேசபுரம்,
கிளிநொச்சி.

(சி-44272) (39-32-13-18)



## கூறுவிலை கோரல்

### இலங்கை மின்சார சபை யாழ்.பிரதேச அலுவலகம்

### மின்மார்க்கங்களிலுள்ள மரம், செடி, கொடிகளை அகற்றுதல்

யாழ்.குடாநாட்டிலுள்ள சகல மின்மார்க்கங்களிலும் இடையூறாக உள்ள மரம், செடி, கொடிகளை அகற்றுவதற்கான கூறுவிலை கள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ்வேலை சம்பந்தமான விவரங்களையும் கூறுவிலைக்கான விண்ணப்பப்படிவங்களையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 100.00 பெறுமதியான பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளையைக் கொடுத்து 25.07.2005 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களிலுள்ள இலங்கை மின்சார சபை மின் அத்தியட்சகரின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த மின் அத்தியட்சகர்களின் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

சுன்னாகம் - மின்சாரசபை வளாகம், சுன்னாகம்
காங்கேசன்துறை - மின்சாரசபை வளாகம், சுன்னாகம்
யாழ்.மாநகரசபைப் பகுதி - 125, அரசடிவீதி, யாழ்ப்பாணம்
பருத்தித்துறை - மாலிசந்தி, நெல்லியடி, கரவெட்டி
வட்டுக்கோட்டை - பிரதான வீதி, சித்தன்கேணி
சாவகச்சேரி - கச்சாய் வீதி, சாவகச்சேரி
யாழ்.புறநகர் பணிமனை - குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்

பூர்த்திசெய்யப்பட்ட படிவங்களில் இருபிரதிகளில் மூலப்பிரதியை வேறாகவும் இணைப்பிரதியை வேறாகவும் கடித உறையிலிட்டு உறை யின் இடதுபக்க மேல்மூலையில் கூறுவிலையில் பெயர், முடிவு திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு 29.07.2005 ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்பதாக நீங்கள் படிவங்களைப் பெற்றுக்கொண்ட அலு வலகத்தில் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். கிடைக்கப்பெற்ற கூறுவிலைகள் எனது அலுவலகத் தில் 2005.08.01 காலை 10 மணியளவில் திறக்கப்படும்.

தாமதமாகவோ அல்லது எமது அலுவலகங்களால் வழங்கப் படாத பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

யாழ்.பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம்.

**மின்பொறியியலாளர்,**
**யாழ்.பிரதேசம்.**

சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை.

# கிளிநொச்சி, முல்லை. கழகங்களிடையே தாச்சி மற்றும் கிரிக்கெட் போட்டிகள்

கிளிநொச்சி,ஜூலை21

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இயங்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் மாபெரும் கிரிக்கெட், தாச்சிச் சுற்றுக்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இச் சுற்றுப்போட்டியில் தமிழீழ விளையாட்டுத்துறையில் பதிவு செய்த கழகங்கள் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்றும்-

மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் விண்ணப்பிக்கவேண்டும் என்றும்- தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாச்சிப்போட்டியில் 12வீரர்களும் கிரிக்கெட்டில் 20 வீரர்களும் ஓர் அணியில் இடம் பெறலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. (3)

## உடையார்கட்டு சம்பியனானது

ஒட்டுசுட்டான்,ஜூலை21

கரைதுரைப்பற்று, ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உடையார்கட்டுப்பிரிவுக்கழகம் வெற்றி பெற்றது.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நடந்த இப்போட்டியில் முதற்சுற்றில் முள்ளியவளைப் பிரிவுக்கழகம் ஒட்டுசுட்டானை வென்றது. 2 ஆம் சுற்று ஆட்டத்தில் முள்ளியவளை பிரிவுக்கழகத்தை உடையார்கட்டுப் பிரிவுக்கழகம் வென்று சம்பியனானது.

(3-341)

# புதுக்குடியிருப்பு அணி மாவட்டச் சம்பியன்

புதுக்குடியிருப்பு,ஜூலை21

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக அணி மாவட்டச் சம்பியனானது.

துணுக்காய்ப் பிரதேசசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் பாண்டியன்குளம் பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் கரைதுரைப் பற்றுப் பிரதேச செயலக அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந்தப்போட்டிகள் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் சி.தயானந்தா தலைமையில் நடைபெற்றன.

# தென்கொரியாவுக்குச் செல்லும் வீரருக்கு இலங்கை வங்கி உதவி

தென்கொரியாவில் நடைபெறவுள்ள சர்வ மதங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் பங்குபற்றச் செல்லும் யாழ். மத்திய கல்லூரி மாணவர்க்கு இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக்கிளை ஏழாயிரம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

யாழ். மாவட்ட மெய்வன்மைப் போட்டிக் குழுவினரால் தெரிவுசெய்யப்பட்ட மத்திய கல்லூரி மாணவரான தவராசா கவிராஜ் இன்று தென்கொரியா பயணமாகவுள்ளார்.

இவர் தென்கொரியாவில் நடைபெறவுள்ள விளையாட்டு விழாவில் ஐயாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளார்.

இந்த மாணவர் இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக் கிளையில் சிறுவர் கணக்கினை வைத்துள்ளார்.

விளையாட்டுத்திறனை ஊக்குவிக்குமுகமாக யாழ். மேற்றரக்கிளை மூவாயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும் ரூபா நாலாயிரம் நிதியினையும் வழங்கியுள்ளது.

(3-7)

# விக்னேஸ்வராவை வீழ்த்தியது மகாஜனா

வலி.வடக்கு,ஜூலை21

அஸ்ராக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவினருக்கான போட்டியொன்றில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மகாஜனாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வராக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அனுரதன், நிருபன், நிதர்சன் ஆகியோர் முறையே 28, 18,16 ஓட்டங்களை ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

ஜெபாகர், பிரதாபன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 8 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

புவிதரன், செந்தூரன், பிரதாபன் ஆகியோர் முறையே 71,38,21 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அரவிந்தன், சிந்துஜன் ஆகியோர் முறையே 2,1 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் விக்னேஸ்வராக் கல்லூரி 66 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

ஜெபாகர், புவிதரன் ஆகியோர் முறையே 5,3 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

(3-86)



தென்கொரியாவில் நடைபெறவுள்ள விளையாட்டு விழாவில் பங்குபற்றச் செல்லும் யாழ்.மத்திய கல்லூரி மாணவர் தவராசா கவிராஜுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக்கிளையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக்கிளை பிரதான முகாமையாளர் எஸ். விக்னராஜா மாணவருக்கு நிதியைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் பி.விவேகானந்தன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: பிரபா)

# ஆயிரத்து 500 அணிகள் பங்கேற்கும் உலக இளைஞர் உதைபந்தாட்டம்

உலகின் பிரமாண்டமான கோத்தியா கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் இம்முறை 59 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 அணிகள் பங்கேற்கின்றன.

இந்த வித்தியாசமான போட்டி சுவீடனில் உள்ள கோடிபோர்க் நகரில் ஆரம்பமாகியது. 6 நாள்கள் நடக்கும் இத்தொடரில் ருவாண்டா, பாரோ தீவுகள் போன்ற அணிகள் முதன்முறையாகக் கலந்துகொள்கின்றன. 1975 இல் கோத்தியா கிண்ண உதைபந்தாட்டப்போட்டி அரங்கேறியது. அப்போது 275 அணிகள் தான் பங்கேற்றன. இப்போது 1,490 கழகங்கள் உட்பட 59 நாடுகளைச் சேர்ந்த 1,500 அணிகள் களம் காண்கின்றன.

ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படும். வயது அடிப்படையில் (11முதல் 19 வயது) 8 வகையான பிரிவுகளில் போட்டிகள் நடக்கவுள்ளன. (ஒ)

## துப்பாக்கி சுடும் போட்டி

பெல்கிரேட்,ஜூலை21

செர்பியா மொன்டிநீக்ரோ நாட்டின் பெல்கிரேட்டில் உலகக் கிண்ணத்துக்கான துப்பாக்கி சுடும் போட்டி நடைபெறுகிறது.

இதில் ஆண்களுக்கான 'டிரொப்' பிரிவில் இத்தாலியின் இமானுவல் பெர்னாஸ்கோணி தங்கம் வென்றார். மற்றொரு இத்தாலிய வீரரான எர்மினியோ பராங்கா வெள்ளிப்பதக்கமும் ஸ்லோவேக்கியாவின் மரியோ பலப் போவிக் வெண்கலப் பதக்கமும் வென்றனர். (ஒ)




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு (மார்ச் 13 - ஏப்.28) மேற்கிந்தியத் தீவுகளில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 16 அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் ஆஸ்திரேலியா, ஹொலண்ட், தென்ஆபிரிக்கா, ஸ்கொட்லாந்தும், 'பி' பிரிவில் இந்தியா, இலங்கை, வங்கதேசம், பெர்முடாவும், 'சி' பிரிவில் இங்கிலாந்து, நியூசிலாந்து, கென்யா, கனடாவும், 'டி' பிரிவில் மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான், சிம்பாப்பே, அயர்லாந்து அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இத் தொடரின் ஆரம்ப விழா மார்ச் 11 இல் நடக்கிறது. இதற்கு முன்னதாக அனைத்து அணிகளும் (மார்ச் 5-9) பயிற்சிப் போட்டிகளில் விளையாடுகின்றன. மார்ச் 13 இல் நடக்கும் முதற் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அடுத்த சுற்றான 'சூப்பர் 8' பிரிவுக்கு முன்னேறும். இந்த 8 அணிகளுக்கான மோதல் மார்ச் 27 முதல் ஏப்.21 வரை நடக்கும். அரையிறுதிப் போட்டிகள் ஏப்.24 (ஜமைக்கா),ஏப்.25 (செயின்ட் லூசியா) நடக்கும். இறுதிப் போட்டி பார்படாசில் ஏப்.28ல் நடக்கும்.

இப் போட்டியின் சின்னமாக 'மெல்லோ' என்ற கார்ட்டூன் உருவம் வெளியிடப்பட்டது. இது மேற்கிந்தியர்களின் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. (ஒ)

# 'ஆஷஸ்' தொடர் இன்று ஆரம்பம்

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதற்போட்டி, லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் இந்தத் தொடர் ஐந்து போட்டிகளைக் கொண்டது.

கடைசியாக நடந்த எட்டு ஆஷஸ் தொடர்களையும் ஆஸ்திரேலியா அப்படியே கைப்பற்றிச் சாதித்திருக்கிறது. ஆனால், இம்முறை நிலைமை அவ்வளவு சாதகமாக இல்லை. கடந்த காலங்களை விட, இங்கிலாந்து இப்போது கூடுதல் பலத்துடன் களமிறங்குகிறது.

ஆஸ்திரேலிய அணியில் மெக்ராத்தின் 500 விக்கெட் சாதனைக்கு இன்னும் ஒரு விக்கெட் தேவைப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# கலைநிலா, இளங்கதிர் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை21

கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தின் 27ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உள்ளூர் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொய்யாத்தோட்டம் ஐக்கிய சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் ஒரு அரை இறுதியாட்டத்தில் கலைநிலா வி.க. அணியை எதிர்த்து விளையாடிய உதயசூரியன் வி.க. அணி 2:1 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

மற்றொரு அரை இறுதியாட்டத்தில் இளங்கதிர் வி.க. அணியை எதிர்த்து விளையாடிய சுடர்ஒளி வி.க. அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

(ஓ-190)

# கிரிக்கெட் மட்டை உற்பத்தியை ஊக்குவிக்கிறது காஷ்மீர் அரசு

'காஷ்மீர் வில்லோ' என்ற புதிய பெயரில் கிரிக்கெட் மட்டை உற்பத்தியை முடுக்கிவிட்டுள்ளது இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் அரசு.

இந்தியாவில், கிரிக்கெட் மட்டை தயாரிப்பில் காஷ்மீர் மாநிலம் முன்னணி வகிக்கிறது. மட்டை தயாரிப்புக்கான வில்லோ மரம் இங்கு அதிகமாக உள்ளதால், கிரிக்கெட் மட்டை உற்பத்தி கொடிக்கட்டிப் பறக்கிறது. காஷ்மீர் மட்டை அதிகம் பிரபலமானதை அடுத்து, போலிப் பெயரில் கிரிக்கெட் மட்டைகள் விற்பனைக்குவர ஆரம்பித்தன. காஷ்மீர் பட் (Bat) என்ற பெயரில் சாதாரண மரத்தில் தயார் செய்த மட்டைகள் விற்பனைக்குவர ஆரம்பித்துள்ளன.

இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் ஜம்மு காஷ்மீர் முதல்வர் முப்தி முகமது சையத். ஜம்முவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய முப்தி, காஷ்மீர் பட் என்ற பெயரில் தரமற்ற கிரிக்கெட் மட்டைகள் உலா வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்காக, நமக்கென்று தனிப் பெயரில் மட்டை உற்பத்தி செய்யவேண்டியது அவசியம்.

இனி நமது தயாரிப்புகள் அனைத்தும் 'காஷ்மீர் வில்லோ' என்ற பொதுப் பெயரில் இருக்கவேண்டும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மட்டை தயாரிப்பதற்காக, 'இங்கிலீஷ் வில்லோ' மட்டை எப்படித் தயாரிக்கிறார்கள் என்ற தொழில்நுட்பத்தை பிரிட்டனில் இருந்து பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும், என்றார்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

நியூ மொடல் (சகல ஆவணங்களுடனும்) **Renault - 17 xxxx** காரும் C.G. 125 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு (பூங்கனிச்சோலை அருகில்). (37920)

**Love Birds** மற்றும் நன்ற், பௌட்டர் இங்கிலீஸ் நண்ஸ், நண்ஸ் பியூட்டி, ஹோமர் ஜேர்மன் அவுல், சில்வர் அவுல், பான்ரெல், ஜக்கோபியன், இஜிப்ஷன், மொடினா றேஸிங், ஹோமர் கொலண்ட், பான்ரெல் மற்றும் பலவகையான புறாக்களும் முயல் குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.ரட்ணம், இல.01, மகாத்மா வீதி, நெல்லியடி. **T.P.**:0777 779975, 021 226 3104 (37988)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை, சிவன்கோயில் வீதியில் (ஏழு) 7 பரப்பு (இரண்டு துண்டுகள்) காணி விற்பனைக்குண்டு. (A -9 பாதையிலிருந்து 100 யார் உள்ளே). விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும். **T.P.**: 0779184574 (37980)

### வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும். தொடர்பு: **T.P.**:0114613157 (37979)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

**Original Prima Broiler** குஞ்சுகள் (Rs.40) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. தனபாலசிங்கம், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37946)

### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள் (ரூபா 40) பேட்டுக் குஞ்சுகள் 25-07-2005 திங்கட்கிழமை பிற்பகல் முதல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன்-சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (37948)

### கார் விற்பனைக்கு

16-ஐ தொடர் இலக்கமாகக் கொண்ட நிஷான்சனி வெள்ளைநிறக் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3053064, 021 222 6590 (37972)

### வாடகைக்கு உண்டு

கோயில் வீதியில் ஏழுபடுக்கை அறைகள், இரண்டு சமயலறைகள், 3 குளியல் அறைகள், வாகனத் தரிப்பிட வசதி (பல வாகனங்கள்) நன்னீர் கொண்டுள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு: 021 222 2880, 071 3055845 (37344)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

பாலர் பாடசாலை காலை 8.30 இலிருந்து 12.30 வரை. வயது 3 இல் இருந்து 5 வரை. ஆங்கிலத்தில் கூடிய கவனம். (37987) (24-18-14)

426 [302], K.K.S. வீதி, யாழ்ப்பாணம் [வண்ணை சிவன் கோயிலடி].

## தேவை

**தமிழ் - டிசைனிங் தெரிந்த கம்பியூட்டர் ஒப்பரேட்டர் தேவை.**

**நேரில் வரவும்.**

ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, அச்சகம், 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-44237)(38-18-14-24)

## UDUVIL GIRLS COLLEGE

IN COLLABORATION WITH

## IDM COMPUTER STUDIES (PVT.) LTD.

IS COMMENCING THE FOLLOWING COURSES FOR OLD GIRLS OF THE SCHOOL

- **DIPLOMA IN COMPUTER STUDIES (5 MONTHS)**
- **DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING (6 MONTHS)**
- **DIPLOMA IN HARDWARE ENGINEERING (9 MONTHS)**

FOR MORE DETAILS:
CONTACT THE SCHOOL OFFICE BEFORE
August 10, 2005 (சி/44260) (24)

## BAIRAHA

### புறொயிலர் குஞ்சுகள் விநியோகம்

35 நாளில் 2 kg மேல் வளர்ச்சியடையக் கூடிய நம்பர் - I பகிரா புறொயிலர் குஞ்சுகள் 23-07-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

தொடர்பு:

- றாஜீவ் பாம் - நவாலி றோட், ஆனைக்கோட்டை.

கிளை:

- தாரகை கால் நடைத் தீவன விற்பனை நிலையம் - முதலாம் கட்டை, பருத்தித்துறை.
- றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட்.
- மாருதி பாம் - வழக்கம்பரை, தொல்புரம்.
- P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
- றாதா - மாவடி, வட்டுக்கோட்டை
- மதுரா - 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- கௌரி கால்நடைத்தீவன விற்பனை நிலையம் - பிரதான வீதி, பண்டதரிப்பு .

T.P.No:. 021 222 3529, 021 222 2867, 0776090926

(37984)(46-18-14-24)

### ரெயிலர் (பெண்) தேவை

பெண்களுக்கான ஆடைகள் தைப்பதற்கு ஓரளவு அனுபவமுள்ள பெண் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவருக்கு சம்பளத்துடன் வேலை காத்திருக்கிறது. 30-07-2005ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

**திருமதி மேரி ஹெலன்**

85, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0777 563294

### வான் தேவை

யாழ். குடாநாட்டுக்குள் பொருள்களை எடுத்துச்சென்று விநியோகிக்க நாள் வாடகைக்கு அல்லது கிலோமீற்றர் வாடகைக்கு வான் ஒன்று தேவை.

**தொடர்பு: 0777 393827** (சி/44273) (24-18-14)

### சமய சந்நிதிகளில்

கோப்பாய், ஜூலை 21

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் தீர்த்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-72-204)

* * *

குருநகர், ஜூலை 21

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா ஆராதனை கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு குருநகர் பங்கைச் சேர்ந்த சிறார்களுக்கு முதல் நன்மை வழங்கப்படவுள்ளது.


நற்கருணை நாதர் வழிபாடு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கு நடைபெறும். மறுதினம் திருவிழாத் திருப்பலி யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனிதரின் திருச்சொரூபப் பவனி இடம்பெறும். (ஒ-51-204)

## யாழ் ரெக் இன் அறிமுக விழாவினை முன்னிட்டு

### மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன்

## மாபெரும் மல்ரிமீடியா கருத்தரங்கு - 2005

**இடம் :- யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கு காலம் :- இன்று 21-07-2005**



**நிகழ்ச்சி நிரல்**

**10.00 - 12.00 மணிவரை யாழ். ரெக் இன் அறிமுகமும் தமிழ் சீடிக்களின் வெளியீடும்**

Photoshop, CorelDraw, Flash, Premiere, 3D Studio Max & Maya

**12.00 - 12.30 மணிவரை GIT கருத்தரங்கு, 12.30 - 1.30 மணிவரை மல்ரிமீடியா & மாயா கருத்தரங்கு**



**யாழ். மண்ணிலே முதல் முறையாக !**

இலங்கையின் கணனித்துறை வரலாற்றின் மல்ரிமீடியா கற்கைநெறிகளில் பெரும்சாதனைகளை புரிந்துள்ள கொழும்பு London Info Tech தனது இணை நிறுவனமான Yaarl Tech Sys (யாழ் ரெக் சிஸ்) இன் ஆரம்ப விழாவினை முன்னிட்டு. யாழ் மாணவர்கள் கணனித் துறையில் திடமான அடித்தளத்தை அமைத்துக்கொள்வதற்காக வழங்கும் விசேட கற்கை நெறிகள்

| Course | Details |
|---|---|
| **Diploma in Computer Studies** — Information Technology, Ms.Windows 98/XP, Ms.Word XP, Ms.Excel XP, Ms.Access XP, Ms.P.Point, Intro. Visual Basic / Java | 3-4 Months, 65% Discount, STUDY PACK |
| **Diploma in Multimedia** — 3D Studio Max 7, Flash MX, Cool 3D Studio, Sony Vegas 5, Sound Forge 7, Fruity Loops, Combustion 2 | 6-7 Months, 60% Discount, GUIDE BOOK |
| **Diploma in Graphics Designing** — Pagemaker 7, Photoshop CS, Corel Draw 12, Photopaint 12, Scanning & Printing, Project Works | 6-7 Months, 50% Discount, GUIDE BOOK |
| **Diploma in Video Editing** — Premiere 6.5/ Pro, Hollywood FX, After Effects 6.5 Pro, Audition, Cool 3D Studio | 4-5 Months, 50% Discount, GUIDE BOOK |
| **Diploma in Web Designing** — Introduction Web Technology, Flash MX, Dreamweaver MX, Swish Max, Photoshop CS, Ulead Cool 3D | 6-7 Months, 50% Discount, GUIDE BOOK |
| **Diploma in Hardware Eng -** Principal of Computer Hardware, Sys. Configuration, Assembling, Repairing, Trouble Shooting, Maintanace & Installation | 3-4 Months, 50% Discount, Study Materials |
| **Diploma in 3D Modeling & Animation** — Maya 6.5, Poser 5 | 6-7 Months, 50% Discount, GUIDE BOOK |
| **Kids Courses** | 3-10 Years |

பாடசாலை மாணவர்கள் கணனித்துறைசார்ந்த அனைவரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**கருத்தரங்கில் பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் யாழ் ரெக் இல் கணனி கற்கைநெறிகளை கற்பதற்கு விசேட கட்டணச்சலுகைகளும் வழங்கப்படும்**

**அனுமதி இலவசம்**

ஏற்பாட்டாளர்கள் : யாழ். பல்கலைக்கழக வணிக மன்றம்

YTS — IT For Future

**No-3, Sir Pon Ramanathan Rd, Kaladdy Junction - Jaffna.**

**Tel : 0773 206 207**

**www.yaarltech.com**

# அமைதிவழித் தீர்வையே அசாத்தியமாக்கியுள்ள பொதுக்கட்டமைப்பு மீதான நீதிமன்றத்தடை!

# குள்ளத்தன அரசியல் நகர்வில் வென்றுவிட்டாரா ஜனாதிபதி?

கொழும்பிலிருந்து சிவசைலஜா

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக உருவாகியிருந்த சிக்கலான நிலைமை மோசமடைந்திருக்கிறது. உயர்நீதிமன்றில் இதற்கெதிராக இனவாதிகள் தாக்கல் செய் திருந்த மனுவை விசாரித்த நீதியாளர்கள் அறுபது பக்கங்களில் ஒரு தீர்ப்பை வாசித்திருக்கிறார்கள். அதில் பொதுக்கட்டமைப்பு சட்டத்துக்கு முரணானது என்று ஜே.வி.பி. கூறிய குற்றச்சாட்டை நிராகரித்து அரசுக்கு



சாதகமாகத் தீர்ப்புக் கூறப்பட்டிருப்பினும் ஆழிப்பேரலை நிவாரண சபையின் உட்கட்டமைப்புத் தொடர்பாக விதித்துள்ள இடைக்காலத் தடைகள் ஜே.வி.பியை அதிக சந்தோசத்திலாழ்த்தியுள்ளன. இந்த இடைக்காலத் தடை உத்தரவு, எதிர்ப்புத் தெரிவித்துவந்த முஸ்லிம் தரப்பையும் திருப்தி செய்திருப்பதாகத் தோன்றுகிறது.

இது எப்படியாயினும் தமிழர் தரப்பில் அடுத்த நகர்வு என்ன? என்பதே இன்று



எழுந்துள்ள பிரதானமான கேள்வியாக இருக்கிறது. வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தமக்கான மீள்கட்டமைப்பு இன்னமும் சாத்தியமாகவில்லை என்பதையிட்டு எத்தகைய பிரதிபலிப்புகளை வெளிப்படுத்துவார்கள்?

### அரசின் ஏமாற்று நாடகம்

தமது உரிமைகளை மறுத்து ஏமாற்று நாடகம் ஒன்றை அரங்கேற்றி இருக்கும் அரசை இனியும் ஹர்த்தால், உண்ணாவிரதங்கள் என்ற அமைதி வழியிலேயே எதிர்ப்பது பொருத்தமானதாக இருக்குமா?

உண்மையில் இத்தகைய ஏமாற்றம் ஒன்றைப் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடுவதற்கு முன்னரே புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எதிர்வு கூறியிருந்தார். சந்திரிகா அரசு மீதான தமது நம்பிக்கையின்மையைப் பல தடவைகள் விடுதலைப் புலிகள் வெளியிட்டிருக்கிறார்கள். மூன்றாம்கட்ட ஈழப்போரின் முன்னர் இடம்பெற்ற பேச்சுகளின் முடிவுகள் ஏற்படுத்திய அனுபவங்கள் அவர்களை அப்படிப் பேசவைத்திருந்தன.

பெரும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதாகக் காட்டிக்கொள்ள தெற்கின் அரசியல் நிலைமைகளை சிக்கலுக்குரியதாக மாற்றி நாடக மேடையின் திரைகளைத் திறக்கத் தொடங்கியது அரசு.

அந்த நிலையில் தெற்கில் பொதுக்கட்டமைப்பை எதிர்த்தவர்களும் ஆதரித்தவர்களும் தமது நலன்களுக்காகவே பொதுக்கட்டமைப்பு விடயத்தைக் கையாண்டிருந்தனர். இன்றைய நிலையும்கூட அதுவாகவே இருக் கிறது.

### இனவாதிகளின் கூச்சல்கள்

அதாவது, ஜே.வி.பி., ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற பேரினவாதிகளுடன் சில முஸ்லிம் தலைவர்களும் இதனைத் தனி நாட்டுக்கான கட்டமைப்பாகக் கூறிக் கூச்சலிட்டனர். இந்தநிலையில் இலங்கையில் சமாதானம் குறித்தும் ஆழிப்பேரலை நிவாரணப் பணி கருதியும் சர்வதேசங்களின் கவனம் இலங்கை மீதிருந்தது. இதனால் - அரசோ, இனவாதிகளோ தமது வழமையான பாணியில் தமிழர் விரோத நடவடிக்கைகளைத் தன்னிச்சையாக முன்னெடுக்க முடியவில்லை.

ஜே.வி.பியின் வளர்ச்சி குறித்து அச்சங்கொண்டிருந்த ஆளும்தரப்பு அவர்களை அடுத்துவரும் தேர்தலில் இரண்டாம் சக்தியாக ஏற்றுக்கொள்ளமுடியாத இக்கட்டுக்குள் இருக்கிறது. இதனால், தமது அரசிலிருந்து ஜே.வி.பியை ஓரங்கட்டுவதற்கான திட்டங்களைத் தீட்டத்தொடங்கியது. அத்திட்டத்திற்குக் கைகொடுத்தது ஆழிப்பேரலையும் அதன் நிவாரணப் பணிகளுக்கான கட்டமைப்பும்தான்.

பொதுக்கட்டமைப்புப் பற்றிய விவரங்கள் மிக இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. இனவாதிகளின் எதிர்ப்புக்களைக் காரணங்காட்டி இருதரப்பு கையொப்பங்களும் கூட திடீரென்றே வெளிப்படுத்தப்பட்டன.

ஒப்பந்தம் கைச்சாத்தான மறுதினமே ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. மதகுருக்களாக இனம்காட்டிக்கொள்ளும் இனவாதிகளில் குறிப்பிட்ட தொகையினர் இந்த ஆர்ப்பாட்டங்களை ஹெல உறுமய, ஜே.வி.பி., தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற பெயர்களில் நடத்தத்தொடங்கினர்.

ஆனால், சந்திரிகா இவற்றையெல்லாம் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் தமது அரசியல் காய்களை மெதுவாக நகர்த்தினார். இப்போது அதன் அடுத்த கட்டத்துக்கு வந்திருக்கிறது அரசு.

உயர்நீதிமன்றின் தீர்ப்பை வைத்துக் கொண்டு தனது நாசூக்கான நடவடிக்கைளை முன்னெடுக்க முயற்சிக்கிறது. ஆனால், தமிழர்கள் தமது தரப்புக் கோரிக்கைகளில் மிகத் தெளிவாக இருக்கிறார்கள்.

### நீதித்துறையும் தமிழருக்கு அநீதி இழைக்கிறதா?

இலங்கை நீதித்துறை தமிழர்களுக்கு எப்போதும் கசப்புணர்வைத் தருவதாக இருந்து வருகிறது. அண்மையில்கூட பிந்துனுவெவவில் நடைபெற்ற கோரமான சிறைப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களை விடுதலை செய்தது என்பதை யாரும் மறந்துவிடமுடியாது.

### இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அலுவலகம் அமைப்பது சாத்தியமா?

பொதுக்கட்டமைப்புக்கு உயர்நீதிமன்றின் தீர்ப்பு மூன்று பிரதானமான நிபந்தனைகளை விதித்துள்ளது. அதில் கிளிநொச்சியில் தலைமை அலுவலகம் அமைய முடியாது. அது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒன்றிலேயே அமையவேண்டும் - என்ற நிபந்தனையாகும்.

அண்மைக்காலமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் நடவடிக்கைகளுக்காகத் தங்கியிருந்த புலிகள் இராணுவத்தால் பெரிய அளவில் உயிராபத்துக்களைச் சந்தித்தார்கள்.

ஈடுசெய்யமுடியாத பல இழப்புகள் இந்த அமைதி முயற்சிக் காலத்துக்குள்ளேயே ஏற்பட்டன. முக்கிய தளபதிகள், அரசியல்துறைப் பொறுப்பாளர்களை இராணுவ பகுதிகளுக்குள் புலிகள் இழந்திருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடும் எதிர்ப்பை வெளியிட்ட புலிகள் தமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசைக் கோரியிருந்தார்கள். ஆனால், அதற்கும் பதிலளித்த சமாதான செயலக செயலாளர் ஜயந்த தனபால அத்தகைய பொறுப்பு எதுவும் தமக்கு இல்லை என்று கூறியிருந்தார்.

இதன் விளைவாகவே கிழக்கிலிருந்து புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வந்தனர். இந்தச் சூழலில் நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடை உத்தரவு மிகவும் சிக்கலான நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

பொதுக்கட்டமைப்பின் சாத்தியமற்ற தன்மையை மேலும் இழுத்தடிக்கச் செய்திருக்கிறது. தெற்கை மையப்படுத்தி அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிடுவதற்கான பின் புலத்தை நீதிமன்றத் தீர்ப்பு உருவாக்கியுள்ளது என்று ஏன் கருதக்கூடாது.

அத்துடன், பிராந்தியக் குழுவின் நிதிக் கையாளுகை அதிகாரத்தையும் இழந்திருக்கிறது. தவிர, தனியான திட்டமிடல்களையும் அது நடைமுறைப்படுத்தமுடியாது. உண்மையில் பொதுக்கட்டமைப்பு உருவாகுவதற்கான அடிப்படைத் தேவைகளை இத்தீர்ப்பு நிராகரித்திருக்கிறது. இதன்மூலம் தமிழர்களின் தேவை நிராகரிப்புக்குள்ளாகியிருக்கிறது என்பதைச் சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில், இடைக்காலத் தடை என்பது முற்றான தடையல்ல. ஆயினும், தெற்கின் அபிவிருத்திப் பணிகளை விரைவாகச் செய்துவரும் அரசு தனது அரசியல் முன்னெடுப்புகளைக் கருதி, வடகிழக்கில் அபிவிருத்தியை இழுத்தடிக்க இதனை ஓர் உத்தியாகக் கையாள வாய்ப்புண்டு.

### ஜே.வி.பியினரும் ஜனாதிபதியும் வெற்றியடைந்துவிட்டனரா?

அதாவது, இப்பொதுக்கட்டமைப்புத் தடை மூலமாக ஜே.வி.பியும் சந்திரிகா அரசும் தத்தமது தரப்புக்கு வெற்றி கிடைத்திருப்பதாக மார்தட்டிக்கொள்கிறார்கள். உண்மையில் இருவருக்கும் இது நன்மை போன்றதுதான். அவர்கள் நினைத்திருக்கும் சுயநலம் கைகூட வாய்ப்பிருக்கிறதுதான். ஆனால், தமிழர் தரப்பின் அடுத்த நகர்விலேயே அதன் தொடர்ச்சி தங்கியிருக்கிறது என்பதை மறைக்கமுடியாது.

மீண்டும் மீண்டும் புலிகளைச் சீண்டுவதே சிங்கள அரசுகளின் நிலையாக இருக்கிறது. மாறிமாறி அரங்கேற்றி தமிழ் மக்களைச் சமாதானத்தின்பால் சலிப்பூட்டி வருகிறது. இந்த வகையிலேயே சந்திரிகாவின் நடவடிக்கையும் சேர்ந்துகொண்டுள்ளது.

தான் தமிழர்களுக்கு எதிரி அல்ல என்று காட்டிக்கொண்டு இனவாதிகள்தான் தமிழர் சார்பான நடவடிக்கைகளுக்கு எதிராக உள்ளார்கள் என்று கூறிக்கொண்டே மறுபுறமாகத் தாம் தமிழர்களுக்குத் எதையும் தாரைவார்க்கவில்லை என்று சிங்கள இனவாதிகளையும் திருப்திப்படுத்திக் கொண்டு தனது அரசுக் காலத்தை ஓட்டும் தந்திரத்தை அரங்கேற்றுகிறார்.


புலிகள் தமது நிர்வாகக் கட்டமைப்புகள் மூலம் ஆழிப்பேரலை நிவாரணப் பணியைத் திறமையாகச் செய்யமுடியும் என்பதை மக்களுக்கு ஏற்கனவே நிரூபித்துவிட்டனர். சர்வதேசமும் இதனை நேரடியாகக் கண்டு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆயினும், பொதுக் கட்டமைப்பு மூலம் அரசுக்கும் சர்வதேசத்திற்கும் மேலும் ஒரு நம்பிக்கையைத் தம் பால் ஏற்படுத்தும் வாய்ப்பு இருந்தது. இதனை முறியடிப்பதே இனவாதிகளின் நோக்கமாக இருக்கிறது.



### இலங்கை உயர்நீதிமன்று புலிகளைக் கட்டுப்படுத்துமா?

ஆனால், பொதுக்கட்டமைப்பு மீதான தடை மூலம் இலங்கை உயர்நீதிமன்றமோ இனவாதிகளோ விடுதலைப் புலிகள் தரப்பைக் கட்டுப்படுத்தவோ, நிபந்தனைக்குட்படுத்தவோ முடியாது. அவற்றின் மீதான நம்பிக்கையின்மையைச் சில தசாப்தங்களுக்கு முன்பே வெளிப்படுத்தி தனிநாட்டுப் போராட்டத்தை ஆரம்பித்த அவர்கள் பல தசாப்தப் போருக்குப் பின்னர் சமஷ்டி ரீதியிலான இடைக்காலத் தன்னாட்சி ஒன்றைப் பரிசீலிக்க விருப்பம் தெரிவித்து அரசுடன் செய்துகொண்ட ஏற்பாடுகூட இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்குக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பமாகவே நோக்கக்கூடியது.

இதனைச் சிங்கள அரசுகள் புரிந்துகொள்ளத்தவறினால் அதன் விளைவுகள் பாதூர



மானவையாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இப்போது நிலைகொண்டிருக்கும் நீண்டகால அமைதி காலத்தில், இலங்கை போரினால் சந்தித்திருந்த பெரும் பொருளாதார வீழ்ச்சியை மெல்லமெல்ல கட்டியெழுப்பி வருகிறது.

இந்த நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் எந்தவகையான அபிவிருத்திகளும் முன்னெடுக்கப்படாமல் மாறாக அவர்களது பொருளாதார வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவே மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பல தடைகளைப் போட்டு வருகிறது அரசு. அதன் ஒரு வெளிப்பாடே இப்போதைய இடைக்காலத் தடை.

ஆழிப்பேரலை நிவாரண சபை ஒன்றிலேயே தமிழர் தரப்புடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளத் தயாராக இல்லாத சிங்கள அரசுகள் சமஷ்டி ரீதியில் ஒரு தன்னாட்சி அதிகாரத்தை எப்படி இடைக்காலத்துக்கேனும் ஏற்றுக்கொள்ளும் என்ற கேள்வியே தமிழர்கள் மத்தியில் மீண்டும் போர் என்ற பேச்சுகளை அதிகப்படுத்தியிருக்கிறது. ✱

## யாழ்ப்பாண மாநகர சபை
### கேள்வி அறிவித்தல்

மாநகர சபையால் நீர் வழங்கல் செய்வதற்கான கீழ்க்காணும் புதிய நீர் உந்தி இயந்திரம் ஒன்று அதன் இணைப்பொருள்களுடன் தேவை. இதனை விநியோகம் செய்யும் தாபனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இக் கேள்விகள் யாவும் 2005-07-31ஆம் திகதிக்குள் கீழ்க்காணும் விவரங்கள் அடங்கியதாக படிவம் தங்களால் தயாரிக்கப்பட்டு கடித உறையின் இடதுபக்கம் "பிஓ/01/2005 நீர் உந்திகள்" என எழுதப்பட்டு ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (வழங்கல் அங்கீகாரம் கிடைத்து 10நாள்களில் மாநகரசபைக் களஞ்சியத்தில் பரிசீலிக்கப்பட்டு கையளித்தல் வேண்டும்).

Submersible Pump Supply For Jaffna Municipal council Pump station

Submersible Water Pump With Motor With Sub Mersible Cable With Kit and Necessary all Fitting

| | |
|---|---|
| Make | - Specify Make |
| Brand | - Specify |
| Capacity | - 70 M 3/hr |
| Total Head | - 60M |
| Speed | - 2830RPM |
| No Of Stages | - 4 |
| Maximum Dia | - 187 MM |
| Motor rating | - 22.4 KW |
| Voltage | - 400V, 3ph, 50Hz |
| Discharge dia | - 4" |

Rate include insrallation and Commissioning State Clerly guarantee Period and Spares needed For 2 Years operation.

(Dr.K.Kunarasa),
Municipal Commissioner,
Jaffna.

(C/44263)(46.13.15.42)


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை21

தென்மராட்சி முன்பள்ளிகளுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. முன்பள்ளிகளின் கண்காட்சி தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதால் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.பாக்கியராஜா கேட்டுள்ளார். (ஒ-202)

## முன்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி மேம்பாட்டு நிலைய முன்பள்ளிகளுக்கு 8 லட்சத்து 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இந்நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளார்.

இந்நிதி மூலம் முன்பள்ளிகளின் கட்டட வேலை, விளையாட்டு உபகரணங்கள், நீர்க் குழாய்கள் கொள்வனவு மற்றும் மின்விநியோகம் என்பவை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தென்மராட்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் வலய இணைப்பாளர் இ.சிவதர்மிகா தெரிவித்தார். (ஒ-202)

## கணனி அன்பளிப்பு

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையின் கல்வி வளாகத்திற்கு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான கணனியும் அதற்கான உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கணனியையும் அதற்கான உபகரணங்களையும் மட்டக்களப்பு ஊரணி பரியோவான் திருச்சபை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (202-78)


## மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

புத்தூர் கிழக்கு குருநாதர் ஆலய வளர்ச்சி நிதிக்காக மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இடம் : நீர்வேலி சவாரித்திடல்
காலம்: 24.07.2005 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஆலய நிர்வாக சபை.

(37966)(32-13-15-42)


## 2ஆம் ஆண்டில் நீங்காத நினைவுகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04 - 09 - 1943 | 21 - 07 - 2003 |

### திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம்

அன்பே சத மென்ற
அழியாத தத்துவத்தால்
துன்பு துடைத் தழித்த
தூயவனே! துவன் கின்றோம்!

50, சாத்திரியார் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

பிரிவுத்துயரால் பெருநோயுறும்:
துணைவர், பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேரன் விதுரன்.

(37986)(42-13-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மலர்வு | மறைவு |
|---|---|
| 25 - 02 - 1929 | 21 - 06 - 2005 |

### அமரர் விநாசித்தம்பி பொன்னுத்துரை

(இளைப்பாறிய அதிபர் - B.A. SLPS-I)

எமக்கு
வழங்குன்றா
வாழ்வு தந்து பாசத்தோடு
நேசமும் அன்புக் கரங்களால் தந்து
தேசம் புகழும் நிலையாகிட
அழியாப் பிறவி எடுக்கும் ஆவல் கொண்டு
தெய்வமாகி வாழ்த்தி நிற்கும் தந்தையின்
பாதத்தில் எமது கண்ணீர்ப்பூக்களைக்
காணிக்கையாக்கி அஞ்சலி செய்கின்றோம்!

இன்று (21-07-2005) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

10, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(37952) (24-13-15-42)


SUBRA (14)
சித்தன்கேணி
SPOKEN ENGLISH
BY: A.BRITTO
புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டது
செவ்வாய், வியாழன் காலை 7.30 (புதியநேரம்)
சிங்களம்
BY:லீலா கிருஷ்ணன்
செவ்வாய், வியாழன் காலை 8 மணி (புதியநேரம்)
ஆரம்பம்: 26.07.2005
(37985)(42-13-15)



ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை




OCEANICK IMPEX
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com



கொசி
உணவகம்& தங்ககம்
இல 15, சிராம்பையடி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 021 222 5899

நேர்முகப்பரீட்சை
➢ காசாளர்(ஆண்/பெண்)
➢ உணவுபரிமாறுபவர்
திகதி :- 23/07/2005
நேரம் :-12.00மணி
கவர்ச்சிகரமான சம்பளம்
நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்


## நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 4 ஆவது ஆண்டு நினைவு நாள்

'வாழ்க தமிழ்! வளர்க கலை!!



| மண்ணுக்கு | விண்ணுக்கு |
|---|---|
| 01 . 10 . 1928 | 21 . 07 . 2001 |

உலகத் தமிழர்தம் இதயங்களில் நீங்கா இடம்பெற்ற உன்னதக் கலைஞன், செந்தமிழ்ச் செல்வன், முத்தமிழ் வித்தகன், நடிப்புலக அகராதி, கலைக்குரிசில், சிம்மக்குரலோன், நவரச நாயகன், வசூல் நாயகன், பத்மஸ்ரீ, பத்மவிபூசன், டாக்டர், செவாலியர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அண்ணன் அவர்களின் ஆத்மாவுக்கு எமது கண்ணீர் மல்கிய இதய அஞ்சலிகள்.

அவர் திரைப்படங்களில் வாழ்ந்துகாட்டிய சரித்திர நாயகர்கள், சமூகத் தலைவர்கள், தெய்வப் பாத்திரங்கள் ஆகியவற்றுடன், பார்க்கும் மக்களுக்கு குடும்பத்தில் அன்பு, மரியாதை, பண்பாடு போன்றவற்றை வளர்த்த குடும்பத் தலைவர் பாத்திரங்களிலும் நடித்து தமிழர் பண்பாட்டை வளர்த்தமைக்கு எமது நன்றிகள்.

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களின் நினைவுகள்
எமது உயிர் உள்ளவரை
மறவாது - நீங்காது!!!
அவர் புகழ் வாழ்க!

யாழ்.மாவட்ட
சிவாஜி ரசிகர்கள்.

(37971)(25-13-15-42)


## யாழ். மக்களுக்கு அரியதொரு சந்தர்ப்பம்



தற்பொழுது TVS அனைத்து வகை உந்துருளிகளும் கைவசம் உள்ளன. யாழ். மக்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்தவும்.

நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

### சிவகுரு உந்துருளி கட்டப் பொருள் வாணிபம்

A-9 வீதி, பரந்தன்,
கிளிநொச்சி.



மேலதிக தொடர்புகளுக்கு:
021 228 5072

Note: சிறிய எண்ணிக்கையிலான கையிருப்பு மட்டுமே எங்களிடம் உள்ளது.

(சி/44268) (24-13-15-42)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 05-10-1985
உதிர்வு: 07-06-2005

அன்பும் ஆதரவும் எமக்களித்த அன்புத் தெய்வமே!
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.07.2005) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை தீர்த்தக்கரையிலும் சபிண்டீகரணக் கிரியைகள் இன்றைய தினம் மு.ப.11 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

### திருமதி தவஞானராசா நளினி

கணவர், உறவினர்.

மந்திகை,
பருத்தித்துறை.

(37961)(42-13-15)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனப் பெயர்ப் பட்டியல்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கென அவர்களின் கல்வித் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கு எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் அவர்களைத் திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வியமைச்சுக்கு வருகைதருமாறு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

203 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அழைப்புக் கடிதங்கள் கிடைக்காவிடினும் பெயர்ப்பட்டியலில் பெயர் உள்ளவர்களும் இத்திகதிகளில் மாகாணக் கல்வியமைச்சுக்கு சமுகமளிக்கலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

கல்வித்தகைமைப் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டவர்கள் பின்வரும் ஆவணங்களையும் அவற்றின் நிழல் பிரதிகளையும் கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

- தேசிய அடையாள அட்டை
- பிறப்புச் சான்றிதழ்
- ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேற்றுச் சான்றிதழ்
- ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பெறுபேற்றுச் சான்றிதழ்
- 2001 மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் சேவையாற்றுவதற்கு வலயக்கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட அனுமதிக்கடிதம்.
- பிரதேச செயலாளர், சமாதான நீதிவான், முன்னர் கல்விகற்ற பாடசாலை அதிபர் ஆகியோரிடம் பெறப்பட்ட மூன்று நற்சான்றிதழ்கள்.

பொதுநிர்வாக அமைச்சின் 27/2001 இலக்க 1/10/2001 திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. எனவே, இவர்கள் 1/10/2001ஆம் திகதிவரை 180நாள்கள் தொடர்ச்சியாக சேவை செய்திருக்கவேண்டுமெனவும், அத்திகதியில் குறிப்பிட்ட கல்வித் தகைமையையும் கொண்டிருக்கவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வலய ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் 104 பேரின் விவரங்கள் வருமாறு:-

**தீவகம்**

ஏ.ஜெனித்தா - வேலபர் ஒழுங்கை, அரியாலை கிழக்கு, எஸ்.கிரிதரன் - ஆனைக்கோட்டை வடக்கு, கே.குமரன் - இலகடி அல்வாய் கிழக்கு, கே.பிறேம்நாத் - தம்பாட்டி அ.த.க.பாடசாலை, பி.சதீஸ்குமார் - சீனியர் ஒழுங்கை கலட்டி, யாழ்ப்பாணம், ஏ.சிவஞானம் - களபூமி காரைநகர், பி.கல்பனா - கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணம்**

பி.கே.சேவியர் - சென்.மேரிஸ் வித்தியாலயம், கே.ஏ.வினிதா அன்ரனிப்பிள்ளை - கடற்கரைவீதி, ஈச்சமோட்டை.

**தென்மராட்சி**

பி.சண்முகராசா - எழுதுமட்டுவாழ் தெற்கு, என்.சுதந்திரன் - சங்கத்தானை, சாவகச்சேரி, கே.சுபாஜினி - கச்சாய் வீதி, கொடிகாமம், எம்.கோமதி - உசன், மிருசுவில், ரி.ஆனந்தராசா - கரம்பைக்குறுச்சி கிழக்கு, வரணி.

**வடமராட்சி**

ஆர்.பிரபுசங்கர் - வதிரி, கரவெட்டி, ரி.தபோதினி - நவிண்டில் வீதி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, எம்.அமிர்தலிங்கம் - கரவெட்டி மத்தி, எஸ்.மதிவதனி - வி.எம்.றோட், பருத்தித்துறை, அமிர்தலிங்கம் ஞானப்பழம் - வல்வெட்டித்துறை.

**வலிகாமம்**

என்.கிருஸ்ணவேணி - பண்ணாகம் தெற்கு சுழிபுரம், ஆர்.இந்திரமாலா - பவர் ஒழுங்கை, தெல்லிப்பழை கிழக்கு, எம்.அன்புசுலோஜினி - கே.கே.எஸ். வீதி, இணுவில் கிழக்கு, எஸ்.யசோதா - மானிப்பாய் வீதி, மானிப்பாய், ஆர்.ரதி - நவாலி தெற்கு, மானிப்பாய், கே.சிவனுஜா - கரந்தன், நீர்வேலிமேற்கு, எஸ்.கவிதா - நெட்டிலிப்பாய், கோண்டாவில் மேற்கு, எஸ்.சுஜாதா - அராலி மத்தி, வட்டுக்கோட்டை, பி.ஞானேஸ்வரி - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, பி.சியாமனி- நவாலி தெற்கு, மானிப்பாய், எஸ்.சிவகுமார் அளவெட்டி தெற்கு, மானிப்பாய், ரி.எஸ்.சிவகுமார் - சென்.பீற்றஸ் வீதி, நவாலி தெற்கு, கே.மஞ்சுளா தேவி - குப்பிளான் தெற்கு, ஏழாலை, எஸ்.கேதீஸ்வரி - அலோலை ஒழுங்கை, வட்டுக்கோட்டை, எம்.அனுஷா - அளவெட்டி வடக்கு, ஏ.யசோதா - புன்னாலைக்கட்டுவன் தெற்கு, எஸ்.நிர்மலா - காளுவன், சுழிபுரம், ஆர்.கே.கிருபாகரன் - இராசையா வீதி, வேலணை வடக்கு,எம்.மயூரன் - ஆர்க் ஒழுங்கை, உடுவில், ஆர்.தமிழ்ச்செல்வி -நாகேஸ்வரி வித்தியாலய ஒழுங்கை, சுன்னாகம், எஸ்.கமலாம்பிகை - டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம், கே.பாலவிசாகன் - ஐயனார் வீதி, சுன்னாகம் மேற்கு, ம.மேரிஅன்ரனிற்றா - இளவாலை மேற்கு, பி.தயாளினி - டச்சு வீதி, உடுவில், எஸ்.சர்மிளா - மானிப்பாய் மேற்கு, யூ.கேதாரகௌரி - ஏழாலை மேற்கு. பி.ஜெயந்தி - உடுவில் வீதி, மருதனார்மடம், எஸ்.வேல்முருகன் - சுழிபுரம் மத்தி.

**கிளிநொச்சி**

ஆர்.உமாநந்தினி - குமரபுரம் பரந்தன், ஆர்.கலைச்செல்வி - கொரக்கன் கட்டு. பரந்தன், ஜே.சுவர்ணலதா - ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, பி.கஜேந்திரன் - ஏழாம் யூனிற், இராமநாதபுரம், வி.முரளிதரன் - டிப்போ வீதி, கிளிநொச்சி, எஸ்.ஞானகரன் - சிவிக் சென்ரர், வட்டக்கட்சி, ஜே.கவிதா - ஐயனார்புரம் வித்தியாலயம், ரி.உதயமூர்த்தி - ஸ்கந்தபுரம், எம்.சுனித்தா - கிளிநொச்சி மத்திய கல்லூரி, கே.சரவணன் - பிரமந்தனாறு, ஆர்.தமிழ்ச்செல்வி - குமரபுரம் பரந்தன், எம்.ஞானமலர் - செல்வநகர், ஆர்.தமிழ்ச்செல்வி - கொரக்கன்கட்டு, பரந்தன், ரி.சுஜிதா - முரசுமோட்டை, பரந்தன், எஸ்.ஜெயகௌரி - தர்மபுரம் அ.த.க.பாடசாலை, ஏ.மாதினி - சற்.இ.ஓ. கிளிநொச்சி, எஸ்.தர்சினி - டீ 10, உருத்திரபுரம், கே.விஜிதா - குருமன்காடு வவுனியா.

**மடு**

எஸ்.ஜேசுதாசன் - பாப்பா மோட்டை அ.த.க.பாடசாலை, பி.கவிதா - ஆண்டான்குளம், அடம்பன், எம்.பாலலோஜினி - பெரியகுஞ்சுக்குளம் முருங்கன், தொம்மை யூசிலின்றோச் - கற்கிடந்தகுளம், முருங்கன்.

**மன்னார்**

எஸ்.பிறீடாஜொய்சி - சூரிய கட்டைக்காடு, நானாட்டான், எஸ்.ஐ.என்.லம்பேட் - வங்காளை, ஏ.றோசாமலர் - மொறாயஸ் - வங்காளை, ஏ.றோச் - நறுவிலிக்குளம், நானாட்டான், பீ.ஜோன்சன் பீலிக்ஸ் - சிவக்கட்டு மன்னார், எவ்.எம்.மெக்லி பெரேரா பேசாலை, பி.ஜே.சாமினி - உயிலங்குளம், கே.ஆர்.டயஸ் - பேசாலை, சி.ஏ.அருள்நாயகம் - நானாட்டான், டீ.பி.இருதயநாதன் - மன்னார், அருட்சகோதரி.மேரி.சியாந்தி - முருங்கன், ஜி.ஏ.ஜெயமலர் - உயிலங்குளம்.

**முல்லைத்தீவு**

பி.அருந்ததி - புதுக்குடியிருப்பு, பி.ரூபினி - விசுவமடு, ஜி.அமலதாசன் - 5 ஆம் வட்டாரம் இரணைப்பாலை, ஏ.பார்த்திமாராணி - 7 ஆம் வட்டாரம் குமுழமுனை, ரி.அமிர்தநாயகி - வட்டு வாய்க்கால், ரி.சிறிநந்தினி - விசுவமடு, பி.அகிலா - வள்ளிபுனம்.

**துணுக்காய்**

வி.முகுந்தன் - கட்டைப்பிராய், எஸ்.சோமேஸ்வரன் - சற்.இ.ஓ.துணுக்காய், வி.சந்திரகாந்தன் - 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.

**வவுனியா தெற்கு**

எஸ்.ரஜனி - வெளிக்குளம், ஏ.ஜே.கருணாகரன் - பூந்தோட்டம், என்.நிசாந்தி - வவுனியா அ.த.க.பாடசாலை, வி.வினோதினி - மூன்றுமுறிப்பு அ.த.க.பாடசாலை, இ.எம்.ஏ.ஜெயராணி - கன்னியர்மடம், ஆர்.இளைதம்பி - பூந்தோட்டம், கே.விஜிதா - பேயாடி கூலான்குளம், எம்.பிரதீபன் - சிறிநாகராசா வித்தியாலயம்.

**திருகோணமலை**

பி.கிரிதரன் - சென்.மேரி வீதி, பி.சாருலதா - ஔவையார் வீதி, பி.சந்திரலேனா - நிலாவெளி, ஜே.மனசேரா - கின்னியா, எவ்.டிலானி - சாரதா வித்தியாலயம்.

*(மிகுதி நாளைய உதயனில்)*

# காஷ்மீரில் தற்கொலைத் தாக்குதல்!



ஸ்ரீநகர்,ஜூலை21

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத் தலைநகர் ஸ்ரீ நகரில் நேற்றுக் கார்க் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் 8 பேர் உயிரிழந்தனர்.

ஸ்ரீநகர் பர்ன்ஹால் மிஷன் பாடசாலை உள்ளது. இங்கு பாதுகாப்பு பணியில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் தீவிரவாதிகள் கார்க் குண்டு மூலம் இராணுவ வாகனங்கள்மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தினர். வெடிகுண்டு நிரப்பிய காரில் வந்த தீவிரவாதி ஒருவர் வீதி ஓரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இராணுவ வாகனங்களின் மீது மோதித் தாக்குதல் நடத்தினார்.

இதில் 4 இராணுவ வீரர்கள் உட்பட 8 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். மேலும் 17 பேர் படுகாயம் அடைந்தனர்.

குண்டு வெடித்த சில நிமிடங்களில் உள்ளூர் செய்தி நிறுவனத்துக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் பேசியவர் தன்னை ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். கார் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டது தங்கள் இயக்கம்தான் என்று கூறி பொறுப்பு ஏற்றுக்கொண்டார் அவர். (ஒ)

# 238 வெளிநாட்டு விஞ்ஞானிகளுக்கு பிரிட்டிஷ் பல்கலைகளில் கற்கத்தடை

## 'த கார்டியன்' பத்திரிகை தகவல்

லண்டன்,ஜூலை21

கடந்த 4 ஆண்டுகளில் 238 வெளிநாட்டு விஞ்ஞானிகளுக்கு பிரிட்டிஷ பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க அனுமதி மறுக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தீவிரவாத செயல்களில் அவர்கள் ஈடுபடக்கூடும் என்ற அச்சுறுத்தலே இதற்குக் காரணம் எனறு பிரிட்டிஷ் பத்திரிகையான 'த கார்டியன்' செய்தி வெளியிட்டுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் 8 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் வேதியியல், உயிரி வேதியியல், நுண் உயிரியல் ஆகிய பாடங்களில் முதுநிலை, ஆராய்ச்சி படிப்புகளில்சேர கடந்த 2001ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 2,282 வெளிநாட்டு வல்லுநர்கள் விண்ணப்பித்தனர்.

மிக முக்கியமான, அறிவியல் பூர்வமான பயிற்சிகள் தரப்படுவதால், பல்கலைக்கழகங்களில் சேர தீவிரவாதிகள் பெரிதும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

வெளிநாட்டு விண்ணப்பதாரர்கள் குறித்துப் பல்கலைக்கழகங்களுக்குச் சந்தேகம் எழும் பட்சத்தில் அது குறித்துப் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு அலுவலகங்களுக்குத் தெரியப்படுத்த வசதிசெய்யப்பட்டுள்ளது. அந்த அலுவலகங்களின் ஒப்புதலைப் பெற்றபிறகே மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் என அந்தப் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# அடுத்த அமெரிக்க அதிபர் தேர்தலில் கொண்டலிசாரைஸ், ஹிலாரிபோட்டி?

வாஷிங்ரன்,ஜூலை21

அடுத்த அமெரிக்க அதிபர் தேர்தலில் இரு பெண்கள் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் அடுத்த அதிபர் தேர்தல் 2008ஆம் ஆண்டு இடம்பெறவுள்ளது. தற்போதைய அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இரண்டாவது தடவையாக அதிபர் பதவி வகிக்கின்றார். அமெரிக்க அரசமைப்பின்படி மூன்றாவது தடவை அவர் அதிபர் தேர்தலில் போட்டியிடமுடியாது. எனவே, குடியரசுக் கட்சி சார்பில் அடுத்தவேட்பாளர் யார் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

அமெரிக்க அதிபராக ஒரு பெண்மணி பதவி வகிக்க வேண்டும் என்ற ஆர்வம் அமெரிக்க மக்களிடம் அதிகரித்துவருவதாகக் கருத்துக் கணிப்புகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனால், தற்போது வெளியுறவுத்துறை அமைச்சராகப் பதவிவகிக்கும் கொண்டலிசாரைஸ் அடுத்த அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சிசார்பில் போட்டியிடுவார் என்று நம்பப்படுகிறது. கறுப்பினப் பெண்மணியான இவர் அதிபர் புஷ்ஷின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்று கூறப்படுகிறது. முன்னர் வெளியுறவுத்துறை அமைச்சராகவிருந்த கொலின் பவலை நீக்கிவிட்டு அதிபர் புஷ் அப்பதவிக்கு கொண்டலிசாரைஸ நியமித்தார். இவர் பிற நாடுகளிடம் மதிப்பைப் பெற்றுள்ளார். அதனால், அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு இவருக்குள்ளது.

இதேவேளை, ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்டன் அதிபர் தேர்தலில் போட்டியிடுவார் என்று ஏற்கனவே அமெரிக்கப் பத்திரிகைகள் ஆருடம் கூறிவருகின்றன. முன்னாள் அதிபர் கிளின்டனின் மனைவியான ஹிலாரி தற்போது நியூயோர்க் நகர செனட் சபை உறுப்பினராக உள்ளார். இந்நிலையில் அடுத்த அமெரிக்க அதிபராகப் பெண்மணி ஒருவர் தெரிவுசெய்யப்படக்கூடும் என்று நம்பப்படுகிறது. (ஒ)

உலக அரங்கில்

# இராணுவப் பேச்சுகள் நேற்று தென்கொரியாவில் ஆரம்பம்

சியோல்,ஜூலை21

வடகொரியாவினதும், தென்கொரியாவினதும் இராணுவங்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலான பேச்சுகளை இரு நாடுகளினதும் இராணுவ பிரதிநிதிகள் சியோல் நகரில் நேற்று ஆரம்பித்தனர்.

கடந்த வருடம் இராணுவ தளபதிகளுக்கிடையிலான இரண்டு சுற்றுப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்ட போதிலும் முழு அளவில் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று அறிவிக்கப் படுகிறது.

செங்கடல் பகுதியில்ஏற்பட்ட பிரச்சினையொன்றின் காரணமாக இரண்டு கொரியாவுக்கும் இடையிலான உறவுகள் கடந்த வருடம் விரிசலடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 697 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 19-7-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4609081-4625337 |

லக்கினம் விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள்

**13 18 29 47**

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,58,644 | 10/- | 35,86,440/- |
| 2.இலக்கங்கள் | 32,937 | 20/- | 6,58,740/- |
| 1.இல லக்கினம் | 32,620 | 30/- | 9,78,600/- |
| 2.இல லக்கினம் | 3,020 | 100/- | 3,02,000/- |
| 3.இலக்கங்கள் | 877 | 500/- | 4,38,500/- |
| 3.இல லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| | | மொத்தம் | 77,39,280/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 87,91,530/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 10,00,000/- தொடர் இல. 5567888 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 4615461-1-12 |
| பொலன்னறுவை | 4610360-2-29 |
| அனுராதபுரம் | 4618795-2-40 |
| மொனராகலை | 4614109-3-22 |
| கொழும்பு | 4622224-2-27 |

# மணிமேகலைப் பிரசுரத்தின்
# 33 புத்தகங்கள் நாளை கொழும்பில் வெளியிடப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை21

மணிமேகலைப் பிரசுர நிறுவனம் பிரசுரித்துள்ள இலங்கை - இந்திய எழுத்தாளர்களின் 33 புத்தகங்களின் வெளியீட்டுவிழா இன்று வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை எழுத்தாளர்களின் 28 நூல்களும் இந்திய எழுத்தாளர்களின் 5 நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

இலங்கை எழுத்தாளர்களின் புத்தளம் சுதன்ராஜின் 'இலங்கை நாட்டுப் புறப்பாடல்கள்', 'காற்றோடு போதல்' ஆகிய நூல்களும் கொழும்பு வரதசுந்தரத்தின் 'ஏ பில் கிறிமேஜ் ரூ திருக்கோணேஸ்வரம்', கொழும்பு ஆர்.ராஜலிங்கத்தின் 'காதலி தேடிக்கொடுத்த மனைவி', லண்டன் டாக்டர் இந்திரகுமாரின் 'விண்வெளியில் வீரகாவியம்', சுவிட்ஸர்லாந்து கல்லாறு சதீஸின் 'சொர்க்கங்களும் தண்டிக்கின்றன', பிரான்ஸ் வண்ணைத் தெய்வத்தின் 'கொந்தல் மாங்காய்', புத்தளம் அமரர் ஜப்பாரின் 'மனிதன் மாமனிதனாக..', அட்டன் மு.சிவலிங்கத்தின் 'ஒரு விதை நெல்', கனடா சந்திரசேகரம் பிள்ளை ஜெயச்சந்திரனின் 'பத்திரகாளி அம்பாளின் பாதாதி கேச தரிசனம்' ஆகிய நூல்களும் -

கொழும்பு சி.வ.இரத்தினசிங்கத்தின் 'இளைய தலைமுறையினருக்கு பன்னிருதிருமுறைத்திரட்டு', கண்டி அந்தனி ஜீவாவின் 'நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம்', யாழ்ப்பாணம் கே.வி.குணசேகரத்தின் 'திருக்குறள் அறத்துப்பால் 80 கதைகள்', 'திருக்குறள் அறத்துப்பால் 90 கதைகள்' மற்றும் யாழ்ப்பாணம் அ.தம்பித்துரையின் 'ஈரமில்லா இதயம்' ஆகிய நூல்களும் -

கிளிநொச்சி டாக்டர் முருகானந்தத்தின் 'நீ நடந்த பாதையில்...', கொழும்பு திருமதி சந்திரகாந்தா முருகானந்தத்தின் 'பெண் விடுதலையும் சமத்துவமும்', மஸ்கேலியா பெ. லோகேஸ்வரனின் 'என் இனிய இவளுக்கு...', திருகோணமலை சண்முகம் அருளானந்தத்தின் 'சகோதரராய் வாழ்வோம்!', ஜேர்மனி த.சு.மணியத்தின் 'ஓர் ஆத்மாவின் ராகம்' ஆகிய நூல்களும் -

கண்டி சீதா சுப்பிரமணியத்தின் 'திருமதி சீதாவின் சுவையாகச் சமையுங்கள்', மட்டக்களப்பு மா.செல்வராசாவின் 'துவக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும்', மட்டக்களப்பு திமிலைத் துமிலனின் 'திமிலைத் துமிலன் கவிதைகள் - காதல்', மட்டக்களப்பு வெற்றிவேல் விநாயகமூர்த்தியின் 'இனிக்கும் இல்லறம்', கனடா செபரத்தினத்தின் 'தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்' என்னும் நூல்களும் -

மட்டக்களப்பு எஸ்.தில்லைநாதனின் 'தமிழ் மொழியின் இலக்கியச் சிறப்பு', 'தமிழ்மொழியின் இலக்கணச் சிறப்பு' மற்றும் திருகோணமலை தேவகடாட்சத்தின் 'ஒரு பிடி மண்' என்னும் நூல்களும் -

இந்திய எழுத்தாளர்களான லேனா தமிழ்வாணனின் 'லேனா தமிழ்வாணனின் ஆயிரம் ஒரு பக்கக் கட்டுரைகள்', திருமதி செந்தாமரையின் 'மைக்ரோ வேவ் சைவ அசைவச் சமையல்', என்.சி. எஸ்.சௌந்தரராயனின் 'பனைமரங்கள் மூலம் கிராம முன் னேற்றம்', பரசுராமனின் 'கணனி மகா அகராதி', துபாய் திருமதி பஜிலா ஆசாத்தின் 'நிலவு ததும்பும் நீரோடை' என்னும் நூல்களும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. (3-203)


## பற்றரிகள்

ரேடியோ மற்றும் டோர்ச் பற்றரிகள்

மீள் மின்னேற்றககூடிய உறையுடைய லீட்அஸிட் கொண்ட பற்றரிகள் UPS மற்றும், வீட்டு மின்பாவனைக்கு

பற்றரிகள் மற்றும் பட்டன் கலங்கள் கெமரா,கைக்கடிகாரம், Hearing aids, கல்குலேட்டர்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ரிமோட் கன்ட்ரோல்கள்

Ni-cd, Ni-MH & Li-ion பற்றரிகள் மற்றும் பற்றரி தொகுதிகள் கையடக்க தொலைபேசிகள், கோர்ட்லஸ் தொலைபேசிகள், லப்டொப்ஸ்,வீடியோ கெமராக்கள் மற்றும் மின்னியல் உபகரணங்களுக்கு உகந்தது.

**மக்னட் செல்ஸ் பிரைவெட் லிமிடட்.**
பற்றரி உலகில் விசேடமானவர்கள்

பிரதான காரியாலயம் 07, மாயா அவனியூ, கொழும்பு 06. தொலைபேசி: 2591456 பக்ஸ்: 2594755
காட்சியறை: லக்கி பிளாஸா,செ.அந்தனீஸ் மாவத்தை, கொழும்பு 03. தொலைபேசி: 2574675

Sellingway Ads.



## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
பாடசாலை வீதி அருகில்,
கமலசிங்கம் இல்லம். (37986)(26.19.14.24)



## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.



தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37987)(26.19.14.24)



## தேவை

தரம் 1 - 11வரை கணிதம், ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், வர்த்தகம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை.

தொடர்பு: சிவா இன்ஸ்ரியூட்
சிவசக்தி B.A. (Cey.)
636, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.


சாவகச்சேரி உ - டச்சு வீதி

## அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்தில இன்று ஸ்ரீ பழனி வேல் திருப்பவனி விழா

முருகன் அடியார்களே!

இன்று (21.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தமிழர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான கலை நிகழ்வுகளுடன் சாவகச்சேரி நகர வீதிகளில் -

ஸ்ரீ பழனி வேல் திருவீதிப்பவனி நடைபெறுகின்றது. ஆகவே, பழனி வேல் முருகனின் திருக்கடாட்சத்தைப் பெற்றுய்யுமாறு அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-44276) (24-14-19) - ஆலய பரிபாலன சபை.


## மாபெரும் ஏல விற்பனை

### 2005-07-24

எமது களஞ்சிய இருப்புக்களைத் துரிதமாக வெளியேற்றுவதற்கு 2005-07-24 ஆம் நாள் முற்பகல் 10 மணிக்கு கிளி/ மத்திய கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள வளாகத்தில் ஏலவிற்பனை நடைபெறும்.

* *பொருள் விரிப்பு*

- இலத்திரனியல் பொருள்கள்
- மின்னியற் பொருள்கள்
- புடைவை வகைகள்
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- அழகுசாதனப் பொருள்கள்
- இன்னும் பல்வகைப் பொருள்கள்

இப்பொருள்களை 2005-07-21ஆம் நாளிலிருந்து 2005-07-23ஆம் நாள்வரை ஏல விற்பனை நடைபெறும் கட்டடத்தில் பார்வையிடமுடியும்.

**கவனிப்புக்கு:-**

- ஏல விற்பனையில் பங்குகொள்வோர் ரூபா ஐம்பது (50.00) செலுத்தி நுழைவு அனுமதி பெறுதல் வேண்டும்.
- ஏலத்தில் பொருள் பெறுபவர் முழுப்பெறுமதியினையும் செலுத்தி உடன் பொருள்களை அகற்றுதல் வேண்டும்.
- முழுப்பெறுமதியினையும் உடன் செலுத்த முடியாதோர் 50% வீதத்திற்குக் குறையாத தொகையைச் செலுத்தி மூன்று (03) நாள்களுக்குள் மீதித்தொகையைச் செலுத்திப் பொருள்களை அகற்றுதல் வேண்டும்.
- ஏலத்தில் பங்குகொள்வோர் தமக்கிடையில் மறைமுக இலாபம்கருதி பேரம் பேசுதல், உடன்படிக்கை செய்தல் பங்குகொள்வோரைத் தகைமை இழக்கச் செய்யும்.

(சி/44279) (24-14-19)


## மரண அறிவித்தல்

### திருமதி கிறேஸ் நேசமலர் செல்லையா



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி கிறேஸ் நேசமலர் செல்லையா அவர்கள் நேற்று (20-07-2005) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பீதாம்பரம் (ஏழாலை வடக்கு) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும் மலர்மணி (கனடா), ஞானச்சந்திரன் (Brunei) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இம்மானுவேல் திருச்செல்வம் செல்லையா (இளைப்பாறிய புகையிரத பிரதம லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் திருநேசன் (கனடா), திருக்குமார் (இலங்கை), மனோகரி (இங்கிலாந்து), மனோநிதி (நவீல்ட் பாடசாலை, கைதடி), றோகான் (கனடா), ஞானலதா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயந்தினி (கனடா), அமிர்த்தி (I.S.A. ஆங்கிலம், சாவகச்சேரி), இரவீந்திரன் (U.K.), ஜெனநாதன் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி), சுதர்மினி (கனடா), சர்வதயாபரன் (கனடா) ஆகியோரின் மாமியும் றெபேர்ட் விமலேந்திரன் (கனடா), ஜெயவதனி (Brunei) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை சனிக்கிழமை (23-07-2005) கனடாவில் நடைபெறும்.

சனிக்கிழமை மாலை 4 மணிக்கு எமது இல்லத்தில் ஜெபக் கூட்டம் நடைபெறும் என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

*22, சந்தனமாதா கோயில் வீதி,*
*சுண்டிக்குளி.*
T.P.: 222 7093 (இலங்கை),
416 335 0435 (கனடா).

தகவல்:
குடும்பத்தினர்.

(37996) (24-14-19)

# சின்னமடு மாதா தேவாலய உற்சவம் குறித்த கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை,ஜூலை21

ஊர்காவற்றுறை சின்னமடு மாதா ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாத்திரிகர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை செய்துகொடுப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் யாத்திரிகர்கள் வந்து செல்வதற்கு ஏற்ற போக்குவரத்து ஒழுங்குகள், குடிதண்ணீர் விநியோகம், சுகாதார நடைமுறைகள், பாதுகாப்பு ஒழுங்குகள், தொண்டர் சேவைகள் குறித்து ஆராயப்படும் என்றும்-

மேற்படி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 5ஆம் திகதியுடன் நிறைவுபெறும் என்றும் - உதவி அரச அதிபர் க. ஸ்ரீமோகனன் தெரிவித்தார். (எ-16)

# மொறட்டுவ பொறியியல் பீட இறுதிப்பரீட்சைகள் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,ஜூலை21

மொறட்டுவப் பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவர்களின் இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வருகின்ற ஊழியர் போராட்டம் காரணமாக இப் பரீட்சைகள் இடையில் நிறுத்தப்பட்டன.

தற்போது இப்பரீட்சைகளைப் பல்கலைக்கழகத்திற்கு வெளியே வைத்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறுதிப் பரீட்சையில் முதலாவது பரீட்சை மட்டும் கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ஐ- 204)


**S.L.A.S.**

போட்டிப் பரீட்சைக்குரிய வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம்
23.07.2005 பிற்பகல் 2 மணி

நெறியாளர்கள்:
பொதுஅறிவு : வழமையான ஆசிரியர் திரு.குமாரவேல் (குமார்)
பொதுஉளச்சார்பு: திரு.க.குணராஜா
தமிழ் : திரு.அ.சண்முகதாஸ்

**புதிய உயர் கல்லூரி,**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**
(38003)(29-12-16)


# சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை21

உலகவங்கியின் ஆதரவுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான ஒருநாள் பயிற்சி வகுப்பு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.செயலக பிரதித்திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நீர்ப் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர்ரி.ஜெயசிங்கம் சுற்றுச் சூழல் தொடர்பான அறிமுக உரைநிகழ்த்துவார். ஆர்.ஞானச்செல்வம், பயிற்சி நோக்கம் தொடர்பாக உரை நிகழ்த்துவார்.

சூழல் பகுப்பாய்வு, சூழல் முகாமைத்துவம் திட்டக் கண்காணிப்பும் சூழலை பாதுகாக்கச் செய்யவேண்டிய செயற்பாடுகள், சூழல் முகாமைத்துவ அபிவிருத்தி திட்டம் என்னும் தலைப்புக்களில் கருத்துரைகள் இடம்பெறும். (எ-204-203)

## ஆடிப்பூரணை தின விழா

யாழ்ப்பாணம்,ஜூலை21

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் நடத்தும் ஆடிப்பூரணை தின விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தாவடி தெற்கு ஸ்ரீ காளி அம்பாள் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆச்சிரம இணைச் செயலாளர் சி. சிவமோகன் 'குருவே சரணம்' என்னும் தலைப்பில் சிறப்பு ஆன்மீக உரை நிகழ்த்துவார்.

நிகழ்வில் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் வீடியோப் படக்காட்சி, கண்காட்சி என்பனவும் இடம்பெறும். (எ-202)

## கிளிநொச்சியில் நாளை சமகாலக் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஜூலை21

கிளிநொச்சி பிரதேச அரச திணைக்களங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புகளின் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகளுக்கான அவசர சந்திப்பு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது.

சமகால அரசியல் முன்னெடுப்புகள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட விருப்பதால் சம்பந்தப்பட்ட சகலரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (எ-301)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

வேலணை, ஜூலை21

வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அரச திணைக்களங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் பொது நிறுவனங்களைச்சேர்ந்த அலுவலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஏ-167)

## அனலைதீவில் நேற்று பக்தர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை21

சரித்திரப் பிரசித்திபெற்ற அனலைதீவு ஐயனார் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்று சிறப்புற நடைபெற்றது.

தீவுப் பகுதிகள் மற்றும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் நேற்றைய தேர்த்திருவிழாவில் பங்கேற்றனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு வசந்த மண்டப் பூசை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பட்டு அணிதல், தங்க ஆபரணம் அணிதல் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து ஐயனார் பெருமான் சித்திரத் தேரில் எழுந்தருளினார். தேரின் பின்னால் நூற்றுக்கும் அதிகமான ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும் பெண்கள் அடியளித்தும் நேர்த்திக்கடனை நிறைவேற்றினர். (எ)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை21

பெங்களூர் வேதாகமப் பாடசாலை அதிபர் பிரம்மஸ்ரீ ஏ.எஸ். சுந்தரமூர்த்திசிவம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

இவரின் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'குருவும் ஆன்மீகமும்' என்னும் பொருளில் இடம்பெறவுள்ள இச்சொற்பொழிவில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-204)


**காணி விற்பனைக்கு**

புலோலி கிழக்கு, வடமராட்சியில் (பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்கு அருகில்) 3¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- Mr.யசி
T.P.: 0776569932
(38009)



புதிய **சக்தி கல்வி நிலையம்**
ஆடியபாதம் வீதி, நல்லூர்
புதிய பிரிவு ஆரம்பமாகின்றது
23.07.2005
SPECIAL ENGLISH CLASS
SPOKEN ENGLISH WITH GRAMMAR
Sat., Sun. - 8a.m.
BY: பெனோ ரமேஸ்
(38004)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலரத்தினம் சிவக்கொழுந்து

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலரத்தினம் சிவக்கொழுந்து அவர்கள் நேற்று (20.07.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஏழாலை வடக்கைச் சேர்ந்த தில்லையம்பலம் பாலரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2005) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மீசாலை மேற்கு, மீசாலை. தி. பாலரத்தினம் (கணவர்), பா.சிவபாலன் (மகன் - கூட்டுறவு பரிசோதகர் - வவுனியா)
(38011)(29-16-12)

## திருமதி சபாபதி இராஜமுத்தி

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் இராஜவீதி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாபதி இராஜமுத்தி 19.07.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் (தபாற்சேவகர்) அன்பு மனைவியும் இராஜேஸ்வரி காலஞ்சென்றவர்களான செல்லப்பாக்கியம், தர்மலிங்கம், தங்கவேலாயுதம் (C.T.B), பத்மாவதி ஆகியோரின் சகோதரியும் சிவகுரு, சிவகாமி, காலஞ்சென்றவர்களான தேவராஜா, செல்லப்பாக்கியம், இளையதம்பி ஆகியோரின் மைத்துனியும் தர்மசீலன் (ரகு- சுவிஸ்), சிவகுமாரி ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜவீதி, அச்சுவேலி. இ.இராஜேஸ்வரி
(அ-38128)(29-16-12)

## திருமதி சின்னையா செல்லம்மா
(சின்னையாப்பாச்சி)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் சரவணையினை வதிவிடமாகவும் திருநகர், கிளிநொச்சியினைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா செல்லம்மா அவர்கள் நேற்று (20.07.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னையாவின் அன்பு மனைவியும் அமிர்தலிங்கம், நாகம்மா, இரஞ்சிதமலர், மகாலிங்கம், நடேசமூர்த்தி, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, சுந்தரமூர்த்தி, தேம்பாமலர், தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் விஜயலட்சுமி, இராமச்சந்திரன், கருணானந்தசிவம், சாரதாதேவி, ஞானேஸ்வரி, மகேந்திரன், கிருஷ்ணவேணி, சிவபரஞ்சோதி, கலாதேவி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புகையிரத வீதி, திருநகர் வடக்கு, கிளிநொச்சி. கு.இராமச்சந்திரன் (மருமகன்-யாழ்.ஸ்பொட், கிளிநொச்சி).
(அ-38127)(29-16-12)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் கந்தையா (J.P.)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முரசுமோட்டையில் வாழ்ந்து தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான நாகலிங்கம் கந்தையா அவர்கள் 19.07.2005 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும் சற்குணவதியின் அன்புக் கணவரும் பங்கயச்செல்வி, கலைச்செல்வி, சந்திரவதனி, சிவவதனி, நாவேந்தன், வித்தியவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன் (சிவா), ரவீந்திரகுமார் (ரவி), தியாகலிங்கம் (சுரி), பிரகலாதன் (சுரேஸ்), கவிதா, கருணானந்தன் (கண்ணன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பசுபதி மற்றும் தம்பிஐயா (J.P.), தங்கம்மா, சுந்தரேஸ்வரன், மனோன்மணி, செல்வராஜா (புகையிரத நிலைய அதிபர், வவுனியா), கணபதிப்பிள்ளை, பரமநாதன் ஆகியோரின் அன்பு அண்ணாவும் சிவகாமி, வள்ளியம்மை, காலஞ்சென்ற ஜோன் பப்ரிஸ்ற் (Rtd. Asst. Collector of Customs), செல்வராணி, Dr. நடராஜா (Rtd. RMO), இன்பராணி, கௌரி, புஸ்பநிதி, சோமசுந்தரம், அமிர்தலிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கீர்த்தனா, சஹானா, அஜீனா, ரஜீத், அஜீத், பிரவீன், அஸ்வினா, டிலான், அனுஷா, செயோன், லாவண்யா, விக்னன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை 23.07.2005 Canada Scabarough - 4164 Shepherd Ave ogden funeral Home இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
001-416-2866109
Canada.
T.P: .021 222 6913, 021 222 7677
(38008)(29-12-16)

## சபாரத்தினம் பத்மநாதன்
(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், புகையிரதத் திணைக்களம் - கட்டடப் பகுதி)



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் பத்மநாதன் 17.07.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் திருமதி லீலாவதியின் அன்புக் கணவரும் நிர்மலன் (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தந்தையும் தனுஜா (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும் அஜித், ஜஜிந், மக்சு ஆகியோரின் பாசமிகு பேரனும் பேபின்நாயகம் (ஒய்வுபெற்ற ஊழியர், புகையிரதத் திணைக்களம்), கருணைநாதன் (நல்லூர், பிரதேச செயலகம், முன்னாள் சமாதான நீதிவான் (லண்டன்), மங்கையர்க்கரசி, யோகரட்ணம் (ஓய்வுபெற்றவர், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), ஆனந்தம் (லண்டன்), சிவநாதன் (பிரான்ஸ்), சிவநிதி (அமெரிக்கா), சிவமலர் (ஜேர்மனி), கருணாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லோகேஸ்வரி, கனேசரட்ணம் (ஜேர்மனி), சற்குணவதி (ஜேர்மனி), தர்மபாலா (ஜேர்மனி), திலகரட்ணம் (பிரான்ஸ்), கோகிலலச்சுமி, யோகராணி, இராமசாமி, கருணாதேவி, சேகவராணி, சரஸ்வதி, விமலதாஸ், பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.205, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று (21.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
205, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். ப.நிர்மலன் (மகன்-பிரான்ஸ்).
(38007)(29-16-12)

# இராணுவ வாகனத் தொடரணிகளுக்கு கிழக்கில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

## திடீர்த் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தில்

ஏறாவூர், ஜூலை21

கிழக்கு மாகாணத்தில் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இராணுவ வாகனத் தொடரணிகளுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அண்மைக்காலமாகப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களையடுத்து இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அதிகாரியொருவர் தெரிவித்தார்.

விடுமுறையில் செல்லும் இராணுவத்தினரை அல்லது இராணுவத் தளபாடங்களை ஏற்றிச்செல்லும் வாகனத் தொடரணிகளுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடந்த மூன்றரை வருடமாக இயங்கி வந்த தமது அரசியல் பணிமனைகளை மூடி அங்கிருந்த தமது உறுப்பினர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குத் திருப்பி அழைத்ததைத் தொடர்ந்து கிழக்கில்பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம் அடைந்துள்ளன.

படையினரும் பொலீஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து விசேட ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் செல்வோர் நிறுத்தப்பட்டு திடீர் சோதனைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் கடந்த சில தினங்களாகப் படையினர் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலையும் மேற்கொண்டனர்.

(எ-3)

## முல்லைத்தீவு நகரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார சபையின் தலைவர் கெமுனு சில்வாவிடம் மேற்படி திட்டவரைபைச் சமர்ப்பித்தார்.

யுத்த நடவடிக்கைகளாலும் ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் பலத்த இழப்புக்களைச் சந்தித்த முல்லைத்தீவு நகரத்தை புதிய இடத்தில் நிறுவுவதற்குத் தேவையான முன்மொழிவுகள் இந்த வரைபில் இடம்பெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் துறைசார் அறிஞர்கள் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (எ)

## இலங்கையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யற் கட்சித் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் இவ்வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு இலங்கை அரசு எடுக்கும் முயற்சி கள் குறித்து கவனஞ்செலுத்துவதாகவும், மக்களின் உரிமையைப் பாதுகாத்து, இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க இலங்கையர்களுக்குள்ள உரிமையைக் காப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி உட்பட இதர ஜனநாயக அமைப்புகள் எடுக்கும் முயற்சிக் கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதென்றும் தீர்மானமொன்றை சர்வதேச ஜனநாயகச் சங்கம் நிறைவேற்றியிருக்கிறது.

ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், அமெரிக்க குடியரசுக்கட்சியின் தலைவர் கென் மெல்மன், பிரிட்டிஷ் ஹன்சர் வேட்டிவ் கட்சியின தலைவர் லியம் பொக்ஸ் மற்றும் ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், கனடா, கிரேக்க நாடுகளின் முக்கிய தலைவர்கள் ஆகியோர் இந்தப் பிரேரணைக்கு ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர்.

சர்வதேச ஜனநாயகச் சங்கத்தின் தெற்காசியப் பிராந்தியத் தலைவராக ரணில் விக்கிரமசிங்க ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டமை குறித்து ஆஸ்திரேலியப் பிரதமர் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கூட்டத்திற்குப் பின்னர் சுதந்திரமும் ஜனநாயகமும் என்ற தலைப்பில் வட்டமேசை பேச்சுஒன்று வெள்ளை மாளிகையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க ஜனாதிபதியுடன் அங்கு கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

(த-க)

## எதிர்ப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

அரசிற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் இதர கட்சிகள் மேற்கொள்ளும் பிரசாரங்கள் குறித்தே இங்கு முக்கிய கவனஞ் செலுத்தப்பட்டது. எதிர்க்கட்சிகளின் பிரசாரத்திற்குத் தனியார் ஊடகங்கள் கூடுதல் முக்கியத்துவம் வழங்கிவருவதால் பதிலடியாக அரச ஊடகங்களை முடுக்கிவிடுவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கிறது.

கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்கும் என ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவை அடுத்த வார முற்பகுதியில் கூட்டுவதற்கும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(எ-க)

## அரசமைப்புத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுக்களில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களான புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர், புலிகளின் அபிவிருத்தித் திட்டமிடல் செயலகப் பிரதிப் பணிப்பாளர், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந் தனர்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இந்த மனுக்கள் நேற்றுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் அரசமைப்பு ரீதியான வழக்குகளில் விளக்கமளிக்கும் அதிகாரம் மாவட்ட நீதிமன்றுக்கு இல்லை. எனவே, இந்த மனுக்களை அது நிராகரிக்க வேண்டும் அல்லது உயர் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த மனுக்கள் தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிபதி கே.எச்.சுமதித்திரபால நேற்று அறிவித்தார். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி நிமல் வீரக்கொடி மன்றில் ஆஜராகியிருந்தார்.

(எ-க)

# மட்டக்களப்பு காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகள் - முஸ்லிம்கள் இணைந்து குழு அமைப்பு!

காத்தான்குடி, ஜூலை21

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள முஸ்லிம்களின் விவசாயக் காணிகள் மற்றும் குடியிருப்பு நிலங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கென விடுதலைப் புலிகளும் முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் இணைந்து புதிய குழு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கொக்கட்டிச்சோலையில் நேற்றுக் காலை முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் மாவட்டத் தலைவர்களுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பொன்றின்போதே இதுதொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள், சம்மேளனங்களின் பேச்சாளர் யூ.எல்.எம்.என். முபீன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரயன் தலைமையில் மாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் அரிதாஸ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பில் ஓட்டமாவடி சார்பில் எம்.கே.லெப்பை காஜியார், வாழைச்சேனை சார்பில் எம். அப்துல்லா காஜியார், ஏறாவூர் சார்பில் வை.எம்.எம்.ஏ.காதர், காத்தான்குடி சார்பில் யூ.எல்.எம்.என்.முபீன் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய குழுவில் முஸ்லிம்கள் சார்பாக 3 பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகள் தரப்பில் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேவைக்கேற்ப பிரதேச செயலாளர்களும் காணி உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகள் 30 ஆயிரம் ஏக்கர் உள்ளபோதிலும் 5 ஆயிரத்துக்கு சற்று அதிகமான காணிகளிலேயே தற்போது விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏனையவை தொடர்பான பிரச்சினைகளுக்கே நிரந்தரத் தீர்வு காணப்படுவதற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. (எ-க)

# திருமலை புத்தர்சிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பின்னணியில் புத்தர்சிலை விவகாரத்தில் அரசின் நிலை என்ன என்றே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவரான இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பினார்.

அவரை உரையாற்றவிடாது அமைச்சர் டினேஷ் குணவர்த்தனவும், ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றக் குழுத்தலைவர் வண. அத்துரலியே ரத்னதேரரும் அடிக்கடி குறுக்கிட்டனர். சம்பந்தன், உயர்நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்கிறார் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களான எம்.கே. சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எ ம்.கே.ஈழவேந்தன் ஆகியோர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் வண. அத்துரலிய ரத்னதேரர் ஆகியோர் மீது பாய்ந்தனர்.

அனைவரையும் அவ்வப்போது கட்டுப்படுத்தி சம்பந்தன் உரையாற்ற வழி ஏற்படுத்திக்கொடுத்தார் சபாநாயகர்.

சம்பந்தன் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது-

திருகோணமலையில் திட்டமிட்ட வகையில் இனக்கலவரத்தை ஏற்படுத்தி அதில் குளிர்காய்வதற்கு இனவாத சக்திகள் கங்கணம் கட்டியுள்ளன. புனித புத்தர் சிலையை மதுபானசாலைக்கும், மீன் சந்தைக்கும் அண்மித்த பகுதியில் வைத்து புத்தரின் புனித தன்மைக்கே களங்கம் ஏற்படுத்தியுள்ளது இந்தக் கும்பல்.

சட்டவிரோதமான வகையில் நிறுவப்பட்ட புத்தர்சிலையை அகற்றுவதற்கு வழங்கப்பட்ட உத்தரவும் இப்போது உயர்நீதிமன்றத்தால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அரசின் உயர்மட்டக் குழுவினர் திருகோணமலைக்கு விஜயம் செய்தனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தமிழர் பிரதிநிதிகளையும் சந்தித்த அவர்கள், பிரச்சினைக்கு உடனடியாக முடிவு கட்டுவதாக உத்தரவாதமளித்துவிட்டு கொழும்புக்குத் திரும்பிவிட்டனர். ஆனால், இன்றுவரை அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

திருமலையில் புத்தர்சிலை அமைக்கப்பட்ட விடயத்தை தமிழர்கள் ஒரு அத்துமீறலாகவே கருதுகிறார்கள். தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் திருகோணமலை நகரில் நூறு வீதமான சிங்களவர்களைக் கொண்ட படைகளை நிறுத்தி தமிழர்களுக்கெதிரான செயற்பாடுகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இந்தச் செயற்பாடானது தமிழ் மக்களைத் தொடர்ந்தும் இந்த அரசின் மீது நம்பிக்கை இழக்க வைக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நிராயுத பாணிகளாக இருந்த விடுத லைப் புலி உறுப்பினர்கள் ஜூலை 10 ஆம் திகதி சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். இச் செயல் தமிழர்களைத் தொடர்ந்தும் ஆத்திரமூட்டுவதாகவே அமைந்துள்ளது. திருகோணமலையில் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள அனைத்து புத்தர் சிலைகளும் சட்டவிரோதமாக வைக்கப்பட்டுள்ள அனைத்து புத்தர் சிலைகளும் சட்டவிரோதமாக வைக்கப்பட்டவையே.

அங்கு கலவரங்களைத் தூண்டி வருபவர்கள் யார் என்பதை சண்டேரைம்ஸ் என்ற ஆங்கில பத்திரிகை தனது புலனாய்வுக் கட்டுரையில் தெளிவாகத் தெரிவித்துள்ளது. தென்பகுதியில் உள்ள பிரதான அரசியற் கட்சி இதன் பின்னணியில் செயற்படுவதாக அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. இதுதான் உண்மை.

அங்கு நடந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக எந்த ஒரு சிங்களவரும் இது வரை கைதுசெய்யப்படவில்லை. கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அனைவரும் தமிழர்களாவர். இந்த நிலைவரங்கள் தொடர்பாக விரிவான கடிதமொன்றை ஜனாதிபதிக்கு நான் எழுதியுள்ளேன். அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை.

ஜனாதிபதியால் திருமலை நிலைவரங்களை ஆராய்ந்து முடிவெடிக்குமாறு அனுப்பிவைக்கப்பட்ட உயர்மட்ட குழு, எமக்கு அளித்த வாக்குறுதி ஏன் இதுவரை நிறைவேற்றப்படவில்லை? கொடுத்த வாக்குறுதிகளுக்கு அரசு எமக்கு கூறும் பதில் என்ன?

அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் திருமலைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன? அங்கு இடம்பெற்ற உண்மைகளை விளக் கும் நீண்ட அறிக்கையொன்றை பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கவுள்ளோம்.

அரசின் ஒவ்வொரு அங்கமும் தமிழர்களை ஏமாற்றியே வந்திருக்கின்றது. எனவே, தொடர்ந்தும் இதுபோன்ற புறக்கணிப்புகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார் அவர்.

(த-க)

விக்னா-யாழ்ப்பாணம்
A/L-2006 ஆரம்பமாகிவிட்டது
Geography-By: mr.Babu
Paper classes
பிரிவு-I செவ்வாய்,வியாழன் (7am.-8 am.)
பிரிவு-II புதன்,வெள்ளி (4.30-5.30p.m.)
அனுமதிக்கு முந்துங்கள் (37970)

தென்னிந்தியாவில் இருந்து
ஏழாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக்கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி
அவர்கள்
வியாழமாற்றம், சனிமாற்றப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ்.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகைதந்துள்ளார்.
பார்க்கும் நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை.
கைரேகை மட்டும் 9 மணிமுதல் ஒரு மணிவரை
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
(37722) ராஜகுருசாமி
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.

இலவச கருத்தரங்கு
aat
Chartered Accountancy
ஆகிய தொழில்சார் கற்கை நெறிகள் பற்றிய இலவச கருத்தரங்கு...
இடம்:- IPAS விரிவுரை மண்டபம்
காலம்:- 21.07.2005 வியாழக்கிழமை
முற்பகல் 10 மணி
No Lecture fee for aat Foundation & Intermediate. New Batches will be commenced on 30th July 2005.
100% Free
IPAS
அலுவலக நேரம்
திங்கள்.புதன்.வெள்ளி.சனி. ஞாயிறு
9.00-1.00 வரை
பிரதான வீதி,
(பிறிமியர் பேக்கரி மேல்மாடி) யாழ்ப்பாணம்.
Tel: 0777 563294, 0777 270452.
E-mail- ipasjaffna2002@yahoo.com

ரெத்தியேக வகுப்பு
கணக்கீடு திரு.பாலகஜன் Sat Sun
A/L-2006
கிரயக் கணக்கீடு 3.30-4.30
கட்டுப்பாட்டுக் கணக்கு 4.30-5.30
A/L-2007
தொடங்கல் கணக்கு 5.30-6.30
ஆரம்பம்: 23/07 - Sat
Beacon யாழ்
வெலிங்டன் சந்தியருகில்

SCC
கணனிப் பயிற்சி நெறிகளுக்கு
50% சலுகைக் கட்டணம்
பிரிவு IV ஆரம்பம் 23,25.07.2005
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811

324, Palaly Road, Jaffna.
A/L 2006 GIT
பொதுத் தகவல் தொழில்நுட்பம்
க.பொ.த. உயர்தரம் - 2006
General Information Technology
G.C.E. Advanced Level - 2006
Speed Batch (1 month) Will be Commenced on
Monday 25th July 2005
Daily 6.00 p.m. to 7.00 p.m.
முதல் 20 மாணவர்கட்கு மட்டுமே அனுமதி
பதிவுகள் நேரில்> MCS, 324, பலாலி வீதி, (ஆலடிச் சந்தி அருகே) யாழ்ப்பாணம்.
Supported by UNDP/JRRP

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.